20 காசு

காஞ்சி

25-5-69 நிறுவனர்: அண்ணாதுரை



நாட்டின் மூலதனம், பேங்குகளில் முடங்கிக் கிடக்கிறது என்று குறைபட்டுக் கொள்வோர் உண்டு ஒரு வகையில் இது உண்மையேயென்றாலும், பேங்குகளும் கூட தொழில்களுக்கான மூலதனத்துக்கு முதல் தந்து உதவி செய்வதன் மூலம், மூலதன முடக்கத்தை ஓரளவு தவிர்த்துக்கொள்ள வழியேற்படுவதனைக் கண்டிருக்கிறோம், இதன் காரணமாகவேகூட அவைகளைத் தேசியமயமாக்க வேண்டும் என்பாரும் உண்டு அமெரிக்காவிலும், மேற்குஜெர்மனியிலும்பாங்குகளில் அடைப்பட்டிருக்கும் பொருளாதார வளம், சுமார் 40 சதவீதம் என்றும், பிரிட்டனில் 24 சதவீதம் என்றும் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இது 121 சதவீதமாம்! இந்த 12·1 சதவீதம் எவ்வளவு தெரியுமா? 4260 கோடியாம்! மலைக்கக் கூடாது; சிந்திக்கவேண்டும்!

* * *

என். சி. சி. யில் இந்திக்குப் பதிலாக கட்டளைச் சொற்களை ஆங்கிலத்தில் பயன்படுத்திக்கொள்ளலாமென்றும், ஆனால் இந்தி கட்டளைச் சொற்களை பயின்று கொண்டால் போதும் என்றும் மத்திய அரசு, தமிழகத்துக்கு வேண்டுகோள்விட்டிருக்கிறது. இதுபற்றி மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள் அதாவது 'இது வரவேற்கத் தக்க மன மாற்றம்தான் என்றாலும், இது போல் இந்தி மட்டுமே என்று செயல்பட்டுக்கொண்டிருக்கிற பிற துறைகளிலும் ஆங்கிலத்தையும் பயின்று கொள்ளவேண்டும் என்றும் தெளிவுபடுத்தி இருக்கிறார். மத்திய அரசுக்குக் காது கேட்குமா? கருத்துத்தெளிவு பிறக்குமா என்பதை அறிய பொறுத்திருப்போம்! காலம் மாறும்!

* * *

நாட்டில் இப்போதுள்ள மும்மொழித் திட்டத்துக்குப் பதில் வேறோர் திட்டத்தை யாரும் வகுத்துக் கொடுக்கலாம் என்றும், அவை நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்றும் பிரதமர் இந்திரா அம்மையார் அறிவித்திருக்கிறார்கள், இது ஒரு வரவேற்க வேண்டிய அறிவிப்பு. அதாவது மும்மொழித் திட்டம் பற்றி இந்திய அரசு ஒரு படி கீழே இறங்கி இருக்கிறது என்ற பொருளைத் தருகிறது இது. இப்போதுள்ள திட்டம் நாட்டின் ஒருங்கிணைப்பை அடிப்படையாய்க் கொண்டிருக்கிறதனாலேயே இது தூக்கி வைத்துக் கொண்டாடப்படுகிறது என்றும், இதைவிடச் சிறந்ததோர் திட்டம் யார் தந்தாலும் யோசிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருப்பதிலிருந்து, இத்திட்டத்தால் கூட எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு மெள்ள மெள்ள மத்திய அரசு வந்து கொண்டிருக்கிறது என்றுதான் பொருள். நாட்டின் ஒற்றுமை குலைய வேண்டுமென்று யாரும் விரும்பமாட்டார்கள், ஆனால் நாட்டு ஒற்றுமை என்பதன் பேரால் ஒற்றுமைக்கே கேடுண்டாக்கும் செயல்களை யார்தான் வரவேற்பார்கள்? அந்த வகையில் இப்போதைய மும்மொழித் திட்டத்தை யாரால்தான் ஏற்றுக்கொள்ள முடியும்! கண்டிப்பாக மாற்றம் தேட வேண்டியதுதான்! வழி தெரியவில்லையாம் மத்திய அரசுக்கு! நீங்களாவது வழி காட்ட முயன்று பாருங்களேன்!

* * *

இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான் என்றோர் பழமொழியுண்டு இந்த நாட்டில்! அதுபோல் தமிழ் நாட்டில் மழை பெய்யாமல் கெடுக்கிறது; ஆந்திர நாட்டை பெய்து கெடுக்கிறது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளக்கொடுமையால் ஆந்திராவில் 2·7 லட்சம் ஏகரில் நெற்பயிர் பாழாகியிருக்கிறதாம்! மேலும் பல லட்சம் ஏகர் பாழாகிவிடக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆறுகளின் ஒருங்கிணைப்புத்திட்டம்ஒன்று உருப்படியான முறையில் உருப்பெறும் வரையில் இதுபோன்ற செய்திகளைப் படித்து வயிறு எரிய வேண்டியதுதான்!

* * *

திடீர் இட்லி! திடீர் சட்னி! திடீர் சாம்பார்! திடீர் ரசம்! என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதுபோல்தான் திடீர் ஸ்டிரைக் என்பதும் இப்போது பிரபலமாகிக் கொண்டிருக்கிறது உலகமெங்கும்! ஸ்டிரைக் செய்வதனால் விளையும் கேடுகள் அந்நாட்டின் பொருளாதாரத்தை எந்த அளவு பாதிக்கச் செய்கிறது என்பதை அக்கறையோடு சிந்திப்பவர்களால் மட்டுமே உணரமுடியும். தன் ஆட்சியே கவிழும் நிலை ஏற்பட்டால்கூட பரவாயில்லை; இந்தக் கேட்டை அகற்றியே தீருவேன் என்று சல்லடம் கட்டிக்கொண்டிருக்கிறார் பிரிட்டிஷ் பிரதமர் வில்சன்! இந்தச் செய்தியை டெலிவிஷனில்கூட தோன்றி தெரிவித்தும்விட்டார்! அதற்கான மசோதா உருவாவதாகவும் கூறிவிட்டிருக்கிறார்! முணு முணுப்புக்கள் மட்டும் காதில் விழுகின்றன; விளைவு எப்படி இருக்குமோ யார் கண்டார்கள்?

விதியே உன்னை விடமாட்டோம்!

சி. பாலகிருட்டிணன்

அண்ணாவின் பிரிவாலே அழுத கண்கள்
அழுகைதனை நிறுத்துதற்கு முன்பே இங்கு
இன்னுமொரு பெருந்தொண்டன் மறைந்து விட்டான்;
இதயத்தைத் துயரத்தால் நிறைத்து விட்டான்!
என்ன இது? வன்கொடுமை! இந்த நாட்டில்
இதுபோல்தான் நடந்திடுமோ? அய்யோ,
அய்யோ!

கண்ணீரே வெள்ளமதாய் ஓடு திங்கே!
கதையெல்லாம் சோகமதாய் மாறு திங்கே!

அண்ணாவைப் பிரித்திட்ட விதியே நீயும்
அத்தோடு ஓயாமல் போன தேனோ?
எண்ணமெலாம் துயர்சேர்த்த விதியே நீயும்
இரக்கமற்ற பாவியாக ஆன தேனோ?

கண்ணீரை விடச்செய்த விதியே நீயும்
கண்மூடித் தனமாக நடந்த தேனோ?
இன்னுமொரு அண்ணனைநீ பிரியச் செய்து
எமையெல்லாம் துடிதுடிக்கச் செய்த தேனோ?

எத்தனையோ தரம்நாங்கள் பொறுத்துக் கொண்டோம்;
இன்னும்நீ உன்செயலை நிறுத்தக் காணோம்!
சத்தியமாய்ச் சொல்கின்றோம்; இனிமேல் நாங்கள்
சண்டையிடத் துணிந்துவிட்டோம்; பொறுக்க
மாட்டோம்!

இத்துடன்நீ விளையாட்டை நிறுத்திக் கொள்ளு;
இல்லையெனில் உனைச்சும்மா விடவேமாட்டோம்
பத்திரமாய் எங்கேனும் பதுங்கிக் கொள்ளு;
பார்த்துவிட்டால் உனைச்சும்மாவிடவேமாட்டோம்

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 25—5—69 | இதழ் 45

இழந்தது போதும்— இனியும் வேண்டாம்

கடந்த 18—5—69 ஞாயிறன்று பிற்பகல் 3-30 மணிக்கு கழக முன்னணியினரும், பேரறிஞர் அண்ணா அவர்களது பேரன்புக்குப் பாத்திரமாகி இருந்தவரும், உணவு, விவசாயத்துறை அமைச்சராகவுமிருந்த ஏ. கோவிந்தசாமி அவர்கள் நோய்க் கொடுமையின் மூர்க்கத்தனமான பசிக்கு, தன்னையே இரையாகத் தந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு கழகத் தோழர்களால் திடுக்கிட்டுத் தேம்பாமலிருக்க முடியாது.

தமிழ் நாட்டுக்கு அடுத்தடுத்து இப்படி சோகச் சம்பவங்களைச் சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கியம் எதனாலே ஏற்படுகிறது என்பதனை, இந்தக் கட்டத்தில் நாம் நினைந்துபார்க்க வேண்டியவர்களாகவிருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்களது மறைவு செயற்கையானது என்றே மதிப்பிடப்படுகிறது. இந்த செயற்கை என்பதன் பொருள், ஓயாத உழைப்பு, கடுமையான உழைப்பு, காலத்தையும், கடமையையும் மிஞ்சிய உழைப்பு என்றே கருதப்படும்,

மிதமிஞ்சிய உழைப்பு, உடல் நலத்தைப் பாதிக்கச் செய்து, உயிரையும் பலிகொண்டுவிட்டது என்பது ஒப்புக்கொள்ளக்கூடிய வாதமேயாகும்.

இதுபோலவே, இவரைப்போலவே, தன் இன்னுயிரையும் நோய்க் கொடுமைக்குத் தந்துவிட்ட ஏ. ஜி. அவர்களும் உழைப்பு உழைப்பு என்றே சுழன்று சுழன்று உழைத்தவர். அளவுக்கும் அதிகமான சிந்தனையால் மூடப்பெற்றிருந்தவர். பொறுப்புக்களின் சுமையால் கூனுற்றுக் கிடந்தவர்.

இருவரது இழப்பும், நமக்குப் படிப்பினைகளைத் தரவில்லையானால், இந்த சோககீதத்தை நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கவேண்டியவர்களாகி விடுவதினின்றும் யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

ஏ. ஜி. அவர்களது இழப்பின் மூலம், கழகம், தன் இனிய, பண்பாட்டுச் சிறப்பு மிக்க, அடக்கமே உருவான செயல்வீரர் ஒருவரை இழந்துவிட்டிருக்கிறது. இதுபோல் ஒவ்வொருவரையும் இழந்து கொண்டே இருக்க நாம் என்ன பாவம் செய்துவிட்டோம்?

ஏ. ஜி. அவர்கள், கழகத்துக்கு பேரறிஞர்அண்ணா அவர்களால் தேடிக்கொடுக்கப்பட்ட வைரமணி! 1953ல் கழகம் மும்முனைப்போராட்டத்தில் ஈடுபட்டபோது, வடபுலத்தை எதிர்த்தும், மாநிலஆட்சியைஎதிர்த்தும் — சர்வாதிகார வெறித்தனத்தைக் கண்டித்தும் பேரறிஞர் அண்ணா அவர்களால் நடத்தப்பட்ட மூன்று முனைத் தாக்குதலின் போது— பேரறிஞர் அண்ணா அவர்கள் கைதுசெய்யப்பட்டுவிட்ட நிலையில், கழகத்தை இக்கட்டான நிலையிலிருந்து நல்ல முறையில் வழிநடத்திச் செல்லுவதற்காக, தலைமைக் கழகத்தின் பொறுப்புக்களை ஒப்படைக்கும் முறையில் கவனப் படுத்திக் காட்டப்பட்ட பண்பாளர்தான் ஏ. ஜி. அவர்கள்.

அதுவரையில் சிப்பி முத்தாகவிருந்த அவர், அதற்குப் பிறகு மாலை முத்தாக சுடர் விடத் தொடங்கினார், தன் ஆற்றலால், பண்பால்!

இந்தப் பண்பாளரது சட்டமன்றப் பணிகள் கூட, கழகத்துக்கும், காங்கிரசுக்கும் புதிய புதிய பலசிந்தனைகளையும், சூழ்நிலையையும் உண்டாக்கி விட்டிருக்கிறது என்பதனை கடந்தகால அரசியல் வரலாற்றை நினைவுகூர்ந்து கொள்வார்க்கு எளிதில் புலனாகும்.

அத்தகைய ஆற்றல் வீரரினை இப்போது இழந்து விட்டிருக்கிறோம். இதுபோன்ற இழப்புக்களை இனியும் நம்மால் தாங்கிக்கொண்டிருக்க முடியாது.

மரணம் தவிர்க்க முடியாதது என்றாலும், பேரறிஞர் அண்ணா அவர்களையோ, ஏ. ஜி. அவர்களையோ இயற்கை மரணம் தழுவிக் கொண்டு விடவில்லை; கடும் உழைப்பும், ஓயாத்தொல்லைகளுமே இவர்களைப் பலி கொண்டுவிட்டிருக்கிறது என்பதை எண்ணி உணரும்போது, நம் அரும் தலைவர்கள் இனியும் உழைப்பு உழைப்பு என்றே ஓயாது உழைத்துக் கொண்டிருக்கக் கூடாது; போதியஓய்வும் இருக்கவேண்டும் என்றுநம் மனம் விரும்புகிறது,

பொதுத் துறையில் அதுவும் அரசியலில் புகுந்து வட்டாட வந்துவிட்டவர்கள் யாரும் கடும் உழைப்பு பற்றி எண்ணிப்பார்க்க முடியாது என்ற வாதம் கிளப்பப்படுமானால், அது வரவேற்கத் தக்கதாக இருக்க முடியாது.

சாதாரண தொழிலாளர்களுக்குக்கூட எட்டு

[15-ம் பக்கம் பார்க்க]

தம்பி

ஒரு ஓலைக்கொத்துக் குடிசைகுள்ளே நடைபெற்றுக்கொண்டிருக்கும், அவலச் சுவைமிக்க சம்பவம் கூறுகிறேன் கேள், மாடமாளிகைகளிலே நடைபெறும் சம்பவமாக இருந்தால் கேட்கத் தித்திக்கும், இது......? என்று எண்ணி, அலட்சியமாக இருந்து விடாதே, பலப்பல ஆயிரம் குடிசைகள் பாடுபட்டால்தான் ஒரு மாளிகை–கவனமிருக் கட்டும்.

''கையைத் தூக்கவே முடியவில்லை. ஒரே குத்தல், குடைச்சல். நானும் எப்படி எப்படியோ சமாளித்துப் பார்க்கிறேன், முடியல்லே......பிராணனை வாட்டுது......"

"பார்டி அம்மா, உங்க அப்பன், சுளுக்குக்கு இந்தக் கூச்சல் போட்றதை. கை சுளுக்கிக்கிட்டுதாம். அதுக்கு உசிரு போகுது தாளமுடியல்லேன்னு ஒரே அமக்களம் பண்ணுற கூத்தைப்பாரு......"

சந்தனம் அரைத்த கரம்!

"பெரிய கிராதகிடி, நீ, நான் என்ன துடியாத் துடிக்கறேன். மூணுநாளா நான் பல்லைக் கடிச்சிக்கிட்டு நோவை பொறுத்துக்கிட்டு இருந்தேன்—என்னாலேயும்—வலி தாள முடியாததாலே கூச்சல் போடறனே தவிர வேணும்னு வேஷ மாப் போடறேன் ...."

"இருக்கும்மா! அப்பா எப்பவும், எப்படிப்பட்ட வலியையும் பொறுத்துக்கிட்டு இருப்பவ ராச்சே. பாவம்! என்னமா வலிக்குதோ என்னமோ...''

"அவ மனம், துளியாவது பதறுதான்னு பாரேன் பொண்ணு; இவளுக்கு மண்டைக் குத்தல் வந்துட்டா, போடற கூச்சலிலே ஊரே திரண்டு வந்துடும்......"

''சும்மா இருங்க......எந்தக் கை வலிக்குது......சோத்துக்கையா......? எந்த இடத் திலே......? தோள் பட்டையாண்டையா......? முதுகுப் பக்கமாக்கூட வலிக்குதா........? சுளுக்குத்தான் ......வேறே ஒண்ணும் இல்லை......''

''எலும்புகிலும்பு முறிஞ்சி போயிருக்குமா, இம்மாம் வலி இருக்குதே......"

''ஏம்பா! பச்சிலை வைத்யரண்டை போய்க் காட்டினா, நல்லதாச்சே......''

''அடி ஏண்டி, பச்சிலையும் உலர்ந்த இலையும்......நீ போயி, நம்ம கொல்லைமேட்டுக் கொளத்தங்கரையிலே, களிமண்ணு இருக்கு பாரு. அது ஒரு நாலு கை கொண்டா......"

''களிமண்ணைக் கொண்டாந்து......?''

''களிமண்ணு, சஞ்சீவி யாச்சே! சுளுக்கு, பிடிப்பு, வீக்கம், இதுக்கெல்லாம், களி மண்ணை குழைச்சி வலிக்கிற இடத்திலே தடவினா, அது உலர உலர, வலி இருக்கற இடம் தெரியாமே போயிடும்......''

''வெறும் களிமண்ணா?''

''ஆமாம்; நீ போடி; உங்க அப்பாவுக்கு எதிலேயும் நம்பிக்கை இருக்காது. களி மண்ணு போட்டுகிட்டு. வலியைக்கொஞ்சம் பல்லைக்கடிச்சிகிட்டு பொறுத்துகிட்டு, ராப்



24.5.69

24.5.69

அத்தரும் பன்னீரும் அவனுக்குக் கிடைக்குமோ?

பொழுது ஓட்டிவிட்டா, பொழுதுவிடிஞ்சதும் சுளுக்கு சொல்லாமே கொள்ளாமே ஓடிப்போயிடும்......''

''ஏம் புள்ளே! நெஜமாத்தான் சொல்றியா? இல்லெ என்னை சும்மா அலங்கோலம் பண்ணவேணும்னு எண்ணமா?''

''அம்மா! விளையாட்டுத்தனமா எதாச்சும் செய்துட்டு வலி, அதிகமாயிடப்போகுது......''

''ஆமாம், எனக்கு வயசு அஞ்சு, நான் விளையாட றேன்......அடி, ஏண்டி! அந்த ஆகாவழியோட கூடிக் கிட்டு. கதை பேசறே, போயி, களிமண்ணு கொண்டுவா ......வர வழியிலே, எருக்கம் செடி இருக்கும். பத்து இலையும் கிள்ளிகிட்டுவா......''

''எருக்கம் பால் தடவினு புண்ணுயிடும்னு சொல்லுவாங்களே......''

''கொழந்தைப் புள்ளெக்குக்கூடத் தடவலாம், புண்ணு ஏன் ஆவுது? போடி, இருட்டி விட்டா, அந்தப் பக்கம், கன்னிம்மா கோயில் சர்ப்பம் உலாத்தும்...''

''ஆமாம் பொண்ணு, பார்த்துப்போ......''

''அது என்ன பண்ணும்? கன்னிம்மா! கன்னிம் மான்னு மூணுதடவை சொன்ன, மாயமா மறைஞ்சி விடும்......''

''எதுக்கும் ஜாக்ரதை வேணும்...போயிட்டு சுருக்கா, வாம்மா, என்ன இழவெடுத்த சுளுக்கோ தெரியல்லே, உசிரை வாட்டுது......''

* * *

களிமண் தடவி, நோய், நொடியிலே போய்விடும் என்று உபசாரம் பேசி அவனை அன்றிரவு உறங்கவைக்க தாயும் மகளும் வெகுபாடுபட்டனர்; காலையில் எழுந்ததும், வலி அதிகமாயிற்றே தவிர குறையவில்லை.

''அப்ப இது, நோய் அல்ல; கன்னியம்மா குத்தம்'' என்று தீர்ப்பளித்துவிட்டு, கோயில் சுற்றக் கிளம்பி விட்டாள் கோவிந்தம்மா. கந்தப்பன், வேலைக்குப் போகமுடியாதே, என்ன கோபம் செய்து கொள்வார் களோ, வேறு ஆளை வைத்து விடுவார்களோ என்று பயந்தான்: ஆனல் என்ன செய்வது, இப்படிப் பயந்து பயந்துதான், வலி இருக்கும்போதே அதைப் பொருட் படுத்தாமல், மூன்று நாட்களாக வேலைக்குச்சென்று, வலியை அதிகமாக்கிக்கொண்டான்.

''ஏன், அந்தச் சோம்பேறி, இன்னைக்கு மட்டம் போட்டுட்டுதா...?''

என்று ஒரு குரலும், அதற்கு ஆதரவாக,

''இப்பத்தான் இதுகளுக்கெல்லாம் திமிர் தலை விரித்து ஆடுதே''

என்று வேருேர் குரலும் கிளம்புவது, கந்தப்பனுக்குக் கேட்பதுபோலவே இருந்தது. இருந்தாலும் பரவா யில்லை, தேவையைவிட அதிகமாகவே சரக்கு தயாரித்து வைத்தாயிற்று; இன்று ஒரு நாள் வேலை செய்யாததாலே காரியம் குந்தகப்பட்டுவிடாது என்ற தைரியத்தில் கந்தப்பன் இருந்தான். தைலம் வாங்கி வரச் சொல்லி தன் மகள் முத்தம்மாளை அனுப்பிவிட்டு அம்மா! அப்பா! அம்மம்மா! ஐயயோ......! அடடடா! —என்று முனகியபடி படுத்துக்கிடந்தான்.

சுளுக்கு, எலும்பு முறிவு ஆகியவைகளுக்குப் பச் சிலைத் தைலம் தடவிக் குணப்படுத்தும் பரம்பரை ராதி வைத்யர் ராமண்ணு வீட்டில் இல்லை. அன்று செந்தி லாண்டவன் கோயிலில் முருகனுக்குச் 'சந்தனக் காப்பு' உற்சவம், பிரமாதம், அதைத் தரிசிக்கப்போயிருந்தார் வைத்தியர்.

முருகனுக்குச் சந்தனக் காப்பு உற்சவம் தடபுட லாக நடைபெற்றது.

பல ஆயிரக்கணக்கான பக்தர்கள், கண்டுகளித் தனர்.

மேளம், வாணவேடிக்கை எல்லாம், செலவு பற்றிய கவலையற்ற முறையில் ஏற்பாடாகி இருந்தது.

'சந்தனக்காப்பு' சேவை முடிந்ததும், சந்தனம் பக்தர்களுக்குத் தரப்பட்டது—விலைகொடுத்து அல்ல, காணிக்கை செலுத்தி, சந்தனம் பெற்றுக்கொண்டனர்.

அத்தரும் பன்னீரும், அரகஜாவும் பிறவும்கலந்து தான் பார், என் செந்திலாண்டவன் மீது அப்பப் பட்ட சந்தனத்துக்கு உள்ள மணம், இருக்கிறதா என்று பார்! இருக்கவே இருக்காது! சந்தனக் காப்பு முடிந்ததும், தனியாக ஒரு தெய்வீக மணம், சந்தனத்துக்கு ஏற்பட்டு விடுகிறது! மல்லிகை முல்லை! மருவு மருக்கொழுந்து ரோஜா, மகிழம்பூ, மனோரஞ்சிதம், எனும் புஷ்பங் களிலே எல்லாம் கிடைக்கும் 'வாசனை' அவ்வளவும் ஒன்ருகச் சேர்ந்து, விட்டதுபோலிருக்கும், செந்தி லாண்டவன் கோயில் சந்தனக்காப்பு உற்சவம் என்ருல் தேசமுழுவதும் தெரியும்! — என்றெல்லாம் பக்தர்கள் பேசிக்கொண்டனர்.

எலுமிச்சை அளவு, விளாங்காய் அளவு, குண்டு மணி அளவு, உருத்திராட்சைக் கொட்டை அளவு, இப்படிப் பக்தர்கள் அவரவர் செலுத்தும் காணிக்கைக் குத் தக்கபடி, சந்தனப் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

தெய்வீக மணம் பொருந்தியது என்று நம்பப்பட்ட இந்தச் சந்தனம் முழுவதும், குடிசையிலே குமுறிக் கொண்டிருக்கிருனே கந்தப்பன், அவன் அரைத்தெடுத் துக் கொடுத்தது!

செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அறைத் துக்கொடுக்கும் ஊழியக்காரன்' இந்தக் கந்தப்பன்.

பல ஊர்களிலிருந்தும் தரிசனத்துக்கு வரும் பக்தர் கள், பகவத் பிரசாதம் என்று பயபக்தியுடன் காணிக்கை செலுத்திப் பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்ட சந்தனம் இந்தக் கந்தப்பன், கை வலிக்க வலிக்க அறைத்தெடுத் துக் கொடுத்தது.

சந்தனக்காப்பு உற்சவத்தை முன்னிட்டு, கந்தப் பன், இரவு பகலாகச் சந்தனம் அறைத்தெடுத்துக் கொடுத்துத்தான், கை சுளுக்கிக்கொண்டுவிட்டது.

மார்பில் பூசிக்கொண்டும், நெற்றியில் பொட்டாக வைத்துக்கொண்டும், சந்தனம் 'கமகமவென்று இருப் பது குறித்துக் களிப்புடன் பேசுகிருர்கள், பக்தர்கள்!

கன்னத்தில் தடவி மகிழ்பவரும், மார்பிலே பூசிக் கொண்டு மந்தகாசமாக இருப்போரும், மாளிகைகளிலே உள்ளனர்.

உண்ட ருசியான ;பண்டம்'ஜீரணம்' ஆவதற்காகப் பூசிக்கொண்டு முருகா! கடம்பா! கந்தா! வடிவேலா!— என்று கூறிப் புரண்டுகொண்டிருக்கிருர்கள் சில பக்தர் கள். கோயில் அர்ச்சகர், தனக்கு வேண்டியவாளுக்

ஆண்டவன் அருள்பெற அதுதான் வழியோ?

காகப் பிரத்யேகமாக, வெள்ளி வட்டிலில் சந்தனத்தை வழித்தெடுத்து வைத்திருக்கிறார்; வத்சலாவோ, சபலாவோ, அபரஞ்சிதமோ அம்சாவோ, அதன் மணம் பெற்று மகிழப்போகிறார்கள்.

'காட்டில் கிடைக்கும் மரம்'—அதிலே கவர்ச்சி யூட்டும் மணம்!—அரைத்தெடுத்திட உழைப்பாளிக்கு முடிகிறது. சீமான்களின் மாளிகையாக இருந்தால்கூட கந்தப்பன், இவ்வளவு கடினமாக உழைத்திருக்க மாட்டான்; கை சுளுக்கு ஏற்பட்டிருந்திராது. செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்துக் கொடுப்பது என்பது 'புண்ய காரியம்' என்பது அவனுக்குக் கூறப்பட்டது.

"கேவலம் கூலிக்காக, சோற்றுக்காகவாடா, கந்தப்பா, நீ வேலை செய்கிறாய்? சகல சித்திகளையும் அருளவல்ல, முருகப்பெருமானுக்கு நீ செய்யும் கைங்கரியம் இது—ஊழியக்காரனல்ல நீ, பக்தன், தெரிகிறதா, எனவே, கஷ்டத்தைப் பாராதே, காசு எவ்வளவு தருவார்கள் என்று கேளாதே, பகவானுக்கு நாம் சேவை செய்கிறோம் என்ற எண்ணத்தோடு வேலை செய், வேல் முருகன், உனக்குத் தக்க சமயத்தில் தக்க விதமாக அருள் பாலிப்பார், என்று திருப்புகழ் பஜனைக் கூடத் தாரும், கோயில் தர்மகர்த்தாவும் கூறினர்; அவர்களெல்லாம் மெத்தப் படித்தவர்கள், அவர்கள் கூறுவது சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை கந்தப்பனுக்கு. எனவேதான், கை தழும்பேறியதைக் கவனியாமல், சுளுக்கு ஏற்பட்டு உயிர் துடிக்கும் விதமான வலி உண்டாகும் அளவுக்கு, சந்தன அரைப்பு வேலையைச் செய்திருக்கிறான்.

முருகனுக்குச் சந்தனக் காப்பு நடைபெற்றது, சன்னதியே நறு மணம் பெற்றது.

பக்தர்கள் சந்தனப் பிரசாதம் பெற்றனர்—மகிழ்ந்தனர். கோயில் நிருவாகத்தினர், வரவு செலவு கணக்குப் பார்த்தனர்—நல்ல ஆதாயம், எனவே, மிகுந்த மகிழ்ச்சி அவர்களுக்கு. அவர்களின் இல்லங்களிலெல்லாம் சந்தன மணம் கமழ்ந்தது! கந்தப்பன் வீட்டிலேயோ, எருக்கம்பால் வாடை மூக்கைத் துளைத்தது. கந்தப்பன் அரைத்துக் கொடுத்த கலவைச் சந்தனம், பலருடைய உடலுக்கு அழகும் மணமும் அளித்தது. கந்தப்பன் உடலில், களிமண் பூசப்பட்டிருக்கிறது, எருக்கம்பால் தடவி இருக்கிறார்கள்; மூதாட்டி ஒருத்தி சொல்லி விட்டுப் போயிருக்கிறாள், "இதெல்லாம் எதுக்கு? பசு மாட்டுச்சாணியை கொதிக்கவைத்துத் தடவு, நோய் பட்டுன்னு விட்டுப்போகுது பாரு" என்று,

இந்திய சர்க்காருக்கும் தம்பி! மக்கள், கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, கை சுளுக்குக்கு எருக்கம் பால் தேடிடும் கந்தப்பன் போல, தங்கள் வாழ்க்கை வசதிக்கு, தகுந்த அளவும் வகையும் பொருள் கிடைக்காமல் திண்டாடித் தேம்புகிறார்கள்.

சந்தனம் அரைத்துக்கொடுத்ததால் உண்டான வலி தீர்ந்தால்போதும் என்ற நிலையில் கந்தப்பன் இருப்பது போல, நாளுக்கு நாள் ஏறிப் பாரமாகிக் கொண்டு வரும் வரித் தொல்லையைத் தாங்குவதற்காவது வலிவு வேண்டுமே, அதை எப்படிப் பெறுவது என்று ஏழை மக்கள் ஏங்கித் தவித்துக் கிடக்கிறார்கள்.

சந்தனக் காப்பு உற்சவம், பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும் என்று பக்தர்கள் பரவசத்துடன் கூறுவதுபோல, இந்திய சர்க்கார், மந்திரிகளின் கௌரவம் உயர்த்தப் படுவதற்கும், மதிப்பு பெருகுவதற்கும் செலவிடும் தொகையையும் வகையையும் கண்டால், சுயராஜ்யத்தின் 'சுந்தர சொரூபம்' தெரிகிறது என்று தெந்தினம் பாடிடப் பலர் உளர்.

கேவலம் கூலிக்காகப் பாடுபடுவதாக எண்ணிக் கொள்ளாதே, இது பகவத் கைங்கரியம், எனவே 'விசுவாசத்துடன்' சேவை செய்யவேண்டும், என்று கந்தப்பனுக்கு உபதேசிக்கப்படுவது போலவே, அன்னிய ஆட்சியின் போது, வரி கொடுக்க, உங்கட்கு, மனக்கசப்பும் கொதிப்பும் இருப்பது சகஜம்; இப்போது அப்படி இருக்கக்கூடாது; இது சுயராஜ்யம்; எனவே முகத்தைச் சுளிக்காமல் பாரம் என்று குமுறாமல், முடியவில்லையே என்று கூறிக் கண் கசக்கிக்கொள்ளாமல், கேட்கும் வரிப்பணத்தைக் கொடுக்கவேண்டும் அதுதான் தர்மம், அதுதான் தேசபக்தி, என்று உபதேசிக்கும் காங்கிரஸ் தலைவர்கள், உரத்த குரலில் பேசுகிறார்கள்.

களிமண் தடவினால் வலி போகுமா, எருக்கம் பாலடித்தால் சுளுக்கு நீங்குமா என்று கந்தப்பன் பரதவிப்பதுபோலவே, என்னென்ன பாடுபட்டால் பிழைக்கலாம், எந்தெந்தத் தேவைகளைக் குறைத்துக் கொள்ளலாம், என்னென்ன துணைத் தொழில்கள் தேடிடலாம், கூடை முடைவோமா, கோழி வளர்ப்போமா, கொல்லன் பட்டரையில் வேலை செய்வோமா, என்ன செய்தால், நமக்கு இன்னும் ஒரு கவளம் கிடைக்கும் என்று ஏக்கத்துடன் எண்ணி எண்ணி, 'போதாமை'யால் தாக்குண்டு கிடக்கிறான், ஏழை! அவனுக்குப் போதிக்கப்படும் தேசீயமோ, குமுறாமல் கொடு, குறை கூறாமல் கொடு, வரியாகக் கொடு, கடனாகக் கொடு, நகைக்குச் செலவிடாதே, 'நல்லது பொல்லதுக்கு' என்று பணத்தை வீணாக்காதே, நாங்கள் அடிக்கடி கடன் கேட்போம், உன் கடமை என்று எண்ணிக்கொண்டு, கழுத்துத் தாலியில் உள்ள குண்டு மணிப் பொன்னாக இருந்தாலும், எடுத்துக் கொடு. தேசபக்தன் என்ற கீர்த்தி உனக்குக் கிட்டும்—என்று பிரசாரகர்கள் பேசுகிறார்கள்.

கந்தப்பன், கையைத் தூக்க முடியவில்லையே, என்று கதறிக் கிடக்கிறான்.

வாழ்வு சுமையாகிவிட்டது, தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை என்று பொதுமக்கள் புலம்புகிறார்கள்.

செந்திலாண்டவனுக்குச் சந்தனக் காப்பு உற்சவம் 'சம்பிரமாக' நடைபெறுகிறது; சவுதி அரேபியா சுற்றுப் பயணத்துக்காக நேரு பெருமகனார் தம் 'ஜமா'வுடன் தயாராகிக் கொண்டிருக்கிறார், அவர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்து ஒரு திங்கள் ஆகிறது. இதற்கு மேல் அவருக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை. சவுதி அரேபிய மன்னரின் விருந்தினராகிறார்! அன்றலர்ந்த ரோஜா தினமும் விமான மூலம் நேருவுக்குக் கொண்டு வந்து தர ஏற்பாடாம். சவுதி அரேபிய மன்னரின் இரம்மியமான ஒரு அரண்மனையில் நேரு துரை மகனார் தங்கி இருக்க ஏற்பாடு! நேருவுக்குப் பிரியமான உணவு வகைகளைச் சமைத்திட, இங்கிருந்தே திறமையான சமயற்காரார்கள்! சவுதி அரேபிய மன்னர், கோடீஸ்வரர்

மதிப்பு உயருமா? மானம் போகுமா?

அவருடைய விருந்தினராகத் தங்கி இருக்கும் நாட்களில் ரோஜாவின் மணமும் ராஜோபசாரமும், சலாமிட்டு நிற்கும் பணியாட்களின் குழைவும், சர்வதேச நிலைமை பற்றிய பேச்சும், நேருவுக்கு மனச் சந்துஷ்டி அளிக்கும்; மகனைத் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாக்கிவிட்டு மாரடித்து அழுதுகொண்டிருக்கும், தாய்மார்களின் கதறல் அல்லவா அவருக்கு இங்கு காது குடையும் அளவுக்குக் கிடைக்கிறது! கண்ணீர் குண்டு வீச்சினால் கிளம்பும் புகையும், பிணவாடையும், நாள் தவருமல் இங்கு! எப்படி நேரு பெருமகனர் இந்தக் 'கண்ருவி'க் காட்சியைக் காண்பது! நிம்மதி இராதே! இதற்கோ அவர் இந்தியாவின் முடிசூடா மன்னரானர்!! மோதிலாலின் திருக்குமாரன், தங்கத் தொட்டிலில் தாலாட்டி வளர்க்கப்பட்ட செல்லப்பிள்ளையாமே!

கண்ணே! கண்வளராய்
கட்டிக் கரும்பே! கண்வளராய்

என்று தாலாட்டுப் பாடித் தாதியர் தொட்டிலாட்டியிருப்பர். அப்படி வளர்ந்த ஆனந்த பவனத்தாருக்கு, இங்கு ஐயோ! அப்பா! அம்மவோ! என்ற அலறலும் கதறலும், எப்படி இனிப்பளிக்கும்? எனவே சவுதி அரேபியா செல்கிருர்! பன்னீரில் குளிக்கலாம், பரிமளகந்தம் பூசலாம், சிரித்திடும் ரோஜாவையும் புன்னகை பூத்திடும் இராஜதந்திரிகளையும் கண்டு களிக்கலாம்; தேன் பாகிலே பதமாக்கப்பட்ட பேரீச்சம்பழமும், கனிச்சாறும் அவருக்கு, மொழி வழி அரசு, எல்லைத் தொல்லை என்பனபோன்றவைகளால் ஏற்பட்ட எரிச்சலைப் போக்க உதவக்கூடும்.

மறந்தே போனேனே தம்பி. இந்தியாவின் மதிப்பு உயரும்!!

இதனலா? இங்கு மக்கள் இல்லாமையில் இடர்ப்பட்டுக் கொண்டு கிடக்கும்போது இவர் சவுதி அரேபியா சென்று இராஜோபசாரம் பெறுவதாலா இந்தியாவின் மதிப்பு உயரும்? என்று—உனக்குக் கேட்கத் தோன்றும்! அப்படித்தான் அவர்கள் சொல்லுகிருர்கள், நம்பாதவனைத் தேசத் துரோகி என்று ஏசுகிருர்கள்.

'என்ன சந்தனக் காப்பு உற்சவமோ! கை சுளுக்கு என் பிராணனை வாட்டுது, இப்படி வலி எடுக்கும் அளவுக்கு நான் அரைத்தெடுத்த சந்தனந்தானய்யா அது— என்று செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்திடும் கந்தப்பன் சொன்னல் சும்மா விடுவார்களா! செந்திலாண்டவன்கூட அல்ல, அங்கு வரும் காவடி தூக்கியும், காவி கட்டியும், மொட்டையும் பிறவு மன்ரே, கந்தப்பன்மீது வசை பொழியும்.

சவுதி அரேபியாவோடு நின்று விடுவதா, நேரு பவனி!

நேரு பவனி, ஒரு நீண்ட தொடர் கதை...

அமெரிக்கா அழைக்கிறது, ஆஸ்திரேலியாவில் அலுவல் இருக்கிறது, எங்குதான் செல்லக்கூடாது! செல்கிருர்!!

இதற்காகச் செலவாகும் தொகையை எமக்குச் செலவிட்டால்கூடப் போதுமே, புளித்த கூழுக்கு ஒரு துண்டு காரமிளகாயாவது கிடைக்குமே! என்று கேட்பர் இந்தப் பஞ்சைகள்.

பஞ்சைகள் எப்போதும் எந்த நாட்டிலும் இப்படித்தான் கேட்பது வாடிக்கை; பவனிவரும் ஆட்சியாளர் குறுநகை புரிந்தபடி, "குறைமதியினரே! வீணுக ஏதேதோ கூறிக் கிடக்கின்றீரே! பவனியால்—எமக்கா இன்பம்? நாட்டின் மதிப்பன்ரோ உயருகிறது'' என்று பேசுவதும் வழக்கம்!

பொறுமையின் எல்லைக்குப் பஞ்சைகள் சென்று முகட்டின்மீது நிற்பர், மேலால் செல்ல வழி இருக்காது. பிறகுதான் திரும்பிப் பார்த்திடுவர். தம்பி! அப்படித் திரும்பிப் பார்த்திடும்போதுதான், 'பஞ்சடைந்த கண்களிலே கனல் கக்கும், 'புழுவும் போரிடும்' என்ற நிலை பிறக்கும்.

அது, இப்போது உடனடியாக நடைபெறக் கூடியதா, என்ன? எனவே, வீண்பீதிக்கு இடமளிக்காமல், நேரு பெருமகனர், சந்தனக் காப்பு உற்சவத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிருர்.

தம்பி! எப்படிப்பட்ட எழில் மிக்க நாட்டிலே இருக்கிருய் தெரியுமா என்று எந்த ஏழையைக் கேட்டாலும், அவன் ஒரு விளக்கமற்ற பார்வையால் நம்மைத் திகைக்க வைப்பான்.

இமயப் பனிமலையின் எழிலும் கங்கை புரண்டோடும் கவர்ச்சியும், காதல் மாளிகையாம் தாஜ்மஹாலின் தகதகாயமும், குதுப்மினரின் கெம்பீரமும் அஜந்தா சித்திரமும், விஜயநகர சாம்ராஜயச் சேதக் குவியலும், மாமல்லபுரத்துச் சிற்பங்களும், குமரிமுனைக் கோலமும் அவன் எங்கே கண்டான்? எங்ஙனம் காண்பான்? இதோ வருகிருர்கள், இந்த எழில் கண்டு மகிழவும், இவை தம் ஏற்றத்தை எடுத்துரைக்கும் பிரமுகர்களுடன் அளவளாவவும்; இந்த நாட்டுக் கலை கல்லிலே வடித்துக் காட்டப்பட்டது மட்டுமல்ல, காவலர்களே! கல்லிலே நீவிர் கண்ட குமரியை, அஜந்தா சித்திரத்திலே உங்களை வசீகரித்துக் கொண்ட அந்த வளைவு, குழைவு, நெளிவுகளை, இதோ உங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடச் செய்யும் வகையில் எடுத்துக்காட்டும், மாலாக்களையும், பாலாக்களையும், குமரிகளையும், தேவிகளையும் காணீர். அவர்கள் கரத்தால் கமலம் காட்டுவர், கண்ணுல் கடலைக் காட்டுவர், வெறும் ஆடலல்ல அன்பரீர்! கேவலம் இச்சையைக் கிளறும் அங்க அசைவுகளல்ல! இவை ஆன்ம சுத்திக்காகவே எமது ஆன்ருேர் அளித்துச் சென்ற 'கலோபாசனை'—கலை மூலம் கடவுளைப் பூஜிப்பதாகும்!—என்று கூறுவர்.

இந்த உபசாரம், உலா, பெறுவதற்கு இப்போது வர இருக்கும் தலைவர்களின் பட்டியல், தற்காலிகமானது, தருகிறேன், பார், கந்தப்பன் கரத்திலே சுளுக்கு இருந்தால் என்ன, சந்தனக் காப்பு சம்பிரமாக நடைபெறுகிறதே அந்தச் சம்பவம் நினைவிற்கு வரும்.

எதியோபிய சக்கிரவர்த்தி
இந்தோனீசியத் தலைவர் டாக்டர் சுகர்ணே
போலந்து முதலமைச்சர்
தாய்லந்து முதலமைச்சர்
சிரியா நாட்டுத் தலைவர்
இலங்கை முதலமைச்சர்
நேபாள நாட்டு முதலமைச்சர்

இவர்களெல்லாம் 'விஜயம்' செய்ய இருக்கிருர்கள்!

‘சர்வோதய’ப் பேச்சு சர்வமும் பொய்யே!

விருந்து, வேட்டை, கேளிக்கை, கண்காட்சி, இடையிடையே சர்வ தேச நிலைமை பற்றியும் பேசுவர்!

ஒவ்வொருவருக்கும், குடியரசுத் தலைவர் விருந்தளிப்பார், குடியரசுத் தலைவருக்கு அவர்கள் ஒவ்வொருவரும் விருந்தளிப்பர்! முதலமைச்சர் ஒவ்வொருவருக்கும் விருந்தளிப்பார், ஒவ்வொருவரும் முதலமைச்சருக்கு விருந்தளிப்பர்; எல்லா விருந்துகளிலும் நளினிகளின் நடனம் உண்டு! எல்லாம் கந்தப்பன் அரைத்தெடுத்த கலவைச் சந்தனம் தம்பி, அவன் கைக்கு எருக்கம்பாலடித்து, களிமண் பூச்சுத் தடவிவிடப்பட்டிருக்கிறது!

ஒரே அடியாக உன் அண்ணன், எரிந்து விழுகிறான், நாங்களெல்லாங்கூட வருத்தப்படக்கூடிய விதமாகப் பெரும் பொருள் இப்படிப்பட்ட விருந்து, உபசாரம், உலா, உற்சவம் ஆகியவற்றுக்குச் செலவாகி விரயமாகிறது. ஆனால் எல்லாப் பணமும் இதற்கே பாழாகிவிடுவதுபோல எடுத்துக் கூறுவது சரியல்ல; வாழ்வும் வளமும் தரத்தக்க எத்துணையோ நல்ல திட்டங்களுக்குப் பணம் செலவிடப்படுகிறது, என்று தம்பி! காங்கிரஸ் நண்பர் கூறக்கூடும்.

அந்த இலட்சணம் எப்படி இருக்கிறது என்பதையும், அந்தப் பொல்லாத மனிதர், கவர்னர் குமாரசாமி ராஜா சென்ற கிழமை எடுத்துக் காட்டிவிட்டார்.

பிரம்மாண்டமான பண விரயம்—வீண் செலவு!— என்று குமாரசாமி ராஜா கூறுகிறார்.

பத்துக்கோடி ரூபாய் செலவில் இங்கு கட்டப்படுகிறது. பவானி சாகர்! மிகப் பிரமாதம் என்று விளம்பரப் படுத்தப்பட்டு வரும் தாமோதர் திட்டத்தை நான் பார்த்தேன் —அங்கு பிரம்மாண்டமான பண விரயம் நடந்துகொண்டிருக்கிறது’ – என்று சென்ற கிழமை கோவையில் கூறினார்.

அஞ்சா நெஞ்சும், நேர்மைத் திறனும் கொண்டிருந்தாலொழிய, இவ்வளவு வெளிப்படையாக, இந்திய சர்க்காரின் திறமைக் குறைவை, ஊதாரித்தனத்தை, கண்டித்திருக்க முடியாது.

இந்திய சர்க்காரின் நிர்வாகத்தைக் கண்டிப்பது என்றால் நேருவைக் கண்டிப்பது என்று பொருள்! நேருவுக்கோ யாராவது ஒரு சிறு சொல் கூறிவிட்டாலும் கண் சிவந்துவிடும்! நேரு புருவத்தை நெரித்தால், எந்தக் காங்கிரஸ் தலைவருக்கும் எதிர்காலம் இருண்டுவிடும்!

இவை தெரிந்தும், உள்ள நிலையை எடுத்துக் கூறத்தான் வேண்டும் என்ற வீரத்தைக் காட்டிய குமாரசாமி ராஜாவைப் பாராட்டாதவர்கள், பண்பற்றோரே!

கவர்னர் பதவி என்பது காந்தி கோயிலில் பஜனை செய்வதற்கும் கான பவனத்தில் காட்சி காண்பதற்கும் மட்டுமே உள்ள ‘பொழுதுபோக்கு’ என்று கருதாமல், நாட்டவருக்கு உண்மையை நடுக்கமின்றி எடுத்துரைக்கும் பெரும் பொறுப்பும் கவர்னருக்கு உண்டு என்ற தூய நோக்குடன், குமாரசாமிராஜா பேசினார்.

எங்கள் பக்கம் அணை கட்டுவதற்கு, செலவு சற்று அதிகம்தான் பிடிக்கும்—உங்கள் பகுதியில் கிடைப்பதுபோன்ற கற்கள் இங்கு கிடைப்பதில்லை. எனவே இங்கு சிறிது பணம் அதிகமாகச் செலவாகிறது என்று, திட்ட அலுவலக அதிகாரி சமாதானம் கூறுகிறார்.

குமாரசாமி ராஜா அவர்கள் பல உண்மைகளைத் தமது ‘இரத்தினச் சுருக்கமான’ பேச்சிலே வெளியிட்டிருக்கிறார்; முப்பது ஆண்டுகள் இருந்து முகந் திருத்தி ஈரோடு பேன் வாங்கி இதமாக எடுத்துச் சொன்னாலும், இதுபோன்ற அஞ்சா நெஞ்சுடன் நம்ம காமராஜர் பெரிய இடத்தின் போக்கைக் கண்டித்துப் பேசும் அஞ்சாமையைப் பெறுவாரா என்பதும் சந்தேகமே!

1, இங்கு செலவாவதைவிட வடக்கே, பணம் அதிகம் செலவாகிறது.

2 செலவு செய்யப்படும் முறை, வீண் விரயத்துக்கு இடமளிக்கிறது.

3 அனாவசியமாக அதிகமான அளவு மேலதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்

இவை, திட்டம் அமுல் செய்யப்படுவது பற்றி' நேரில் கண்டறிந்தவர், பொறுப்பான பதவியில் அமர்ந்திருப்பவர் கூறுவார்.

வடக்கு என்பதற்காகவே ஏதாவது வம்பும் தும்பும் பேசும் வட்டாரமல்ல.

தேர்தல் ஆசை பிடித்துக் கொண்டதால், பேசும் பேர்விழியுமல்ல!!

பணம் விரயம் ஆவதை மட்டுமல்ல, அவர் சுட்டிக் காட்டி இருப்பது,

தாமோதர் திட்டத்தில் தேவையைவிட அதிகத் தொகை செலவிடப்படுகிறது என்பது மட்டுந்தான் ராஜாவின் மனக்குறை என்றால், உயரிடத்தில் அமர்ந்துள்ள அவர், இதனை நேருவிடம் ஜாடை மாடையாகக் கூறினாலேபோதும் ஆனால் ‘ராஜா’ — கோவைப் பொதுக்கூட்டத்தில் தொழிலதிபர்களும், துரைத்தனத்தாரும் கூடியிருந்த மன்றத்தில் எடுத்துப்பேசி இருக்கிறார்.

திட்டங்களைச் சிக்கனமாகச் செலவிட்டு முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகப் பேசினதாக யாராவது கருதிக்கொண்டு, தமது பேச்சின் சூட்சமத்தை அறியாது போய்விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தினால் உந்தப்பட்ட நிலையில் ராஜா மேலும் சில உண்மைகளை எடுத்துக்காட்டினார்.

> வடக்கே, பேசுவது சர்வோதயம் பற்றி
> ஆனால் நடைமுறை என்ன என்றால் பிரமாண்டமான நவீன அமெரிக்க யந்திரங்கள் வரவழைப்பது!!

இந்தக் கேலிக்கு ஈடாகச் சமீப காலத்தில், எந்தத் தலைவரும் வடநாட்டுப் போக்கைக் கண்டித்ததில்லை என்று கூறலாம்.

> கட்டுவது காவி
> தொட்டு இழுக்கிறான் பாவி!

என்று காரிகை கதறக் கேட்டால் எப்படி இருக்கும்? அதுபோல, பேசுவது சர்வோதயம், வரவழைப்பதோ அமெரிக்க நவீன யந்திரம்—என்று குட்டுகிறார் ராஜா!!

சர்வோதயம்—ஒரு இலட்சியம், உத்தமரொருவர் ஊருக்கும் உலகுக்கும் காட்டும் பாதை! இதற்கு உதட்டுபசாரம் அளித்துவிட்டு, தமது தேவைக்கு, வசதிக்கு, அமெரிக்காவிலிருந்து நவீன யந்திரங்களை வரவழைத்துப் பயன்பெறுகிறார்கள் வடக்கே!

வடக்கு வடக்குதான் தெற்கு தெற்குதான்!

சர்வோதயம் பேசப்படுகிறது—செயலோ அதற்கு நேர்மாறாக இருக்கிறது.

இந்தக் கபடத்தைக் காட்டமட்டும் ராஜா இதைக் கூறினதாக நான் எண்ணவில்லை, தம்பி, இதற்கு உள்ளே மிகப்பெரிய உண்மை உறங்கிக்கொண்டிருக்கக் காண்கிறேன்.

ஓ! என் நாட்டவரே! உரத்த குரலில், சர்வோதயம் பற்றிய உபதேசம் நடக்கிறது; வடக்கே இருக்கும் தலைவர்களெல்லாம், அந்த இலட்சியத்தை வாழ்த்திப் பேசுவது கேட்டு, மயங்கிவிடாதீர்கள்! சர்வோதயம் பேசும் அந்த வடக்கத்தித் தலைவர்கள், இனிக்க இனிக்க நெஞ்சு நெக்குருகப் பேசுகிறார்களே தவிர, உள்ளூர அவர்களுக்கு சர்வோதயத்தில் நம்பிக்கை கிடையாது. சர்வோதயம் பேசிக்கொண்டு அவர்கள் அங்கே சர்க்கரை ஆலை வேண்டாம் கருப்பட்டி போதும் நூலாலை வேண்டாம் சர்க்காபோதும், காகித ஆலை வேண்டாம் பனை ஓலை போதும், மோட்டார் தொழில் வேண்டாம், கட்டை வண்டி போதும், டிராக்டர் வேண்டாம் ஏர் எருது போதும், என்றெல்லாம் இருந்துவிடுகிறார்கள் போலும் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். நாமும் இங்கு சர்வோதயம் காண்போம் என்று மனதார நம்பி வளர்ச்சியைக் குலைத்துக்கொள்ளாதீர்கள்; வடக்கே உள்ளவர்கள் பேச்சிலேதான் சர்வோதயம், ஆனால் நடைமுறையிலோ நவீன அமெரிக்க யந்திரங்களைத்தான் வரவழைக்கிறார்கள்.

அவர்களுடைய இந்தக் கபடத்தை நான் கண்ணால் கண்டேன்—ஏமாறாதீர், என நாட்டவரே! அவர்களின் சொல்வேறு, செயல்வேறு! உள்ளொன்று வைத்தும் புறமொன்று பேசுகிறார்கள்.

குமாரசாமிராஜாவின் பேச்சிலே இவ்வளவும், எண்ணிப் பார்க்கப் பார்க்க இதனினும் அதிகமாகவும், பொருள் பொதிந்திருக்கக் காண்கிறேன்.

சர்வோதயம் பேசுகிறீர்களே! இப்படி நவீன யந்திர மோகம் கொண்டு அலைகிறீர்களே!—என்று ராஜா, வடக்கே இடித்துக் கூறவில்லை, தம்பி, இங்கு நமக்கு எச்சரிக்கை செய்கிறார், சர்வோதயம் பேசும் வடநாட்டார் தங்கள் தொழிலில் பழைமையின் சாயலைக் கூட வைத்துக் கொண்டில்லை, எல்லாம் அமெரிக்க யந்திர மயமாக இருக்கிறது; உண்மையை அறியாமல், அவர்கள் உதட்டசைவு கேட்டு, மயங்கிவிடாதீர்கள்; சர்வோதயம், பேச்சு; செயல் நவீனம், நவயுகம் அமெரிக்கமுறை!—என்று எடுத்துக் கூறுகிறார்.

தம்பி! பல முறை பார்த்து, மிகவும் மனம் புழுங்கி, நீண்ட காலம் மறைத்துப் பார்த்துப் பார்த்து கடைசியில் இனியும் நாமறிந்த இந்த உண்மையை நமது மக்களுக்கு எடுத்துக் கூறாமலிருப்பது, மக்களுக்கு நாம் மனதறிந்து செய்யும் துரோகமாகும் என்று உணர்ந்து, என்ன நேரிட்டாலும் கவலை இல்லை, நேருவுக்குக் கோபம் பிறிட்டுக்கொண்டு வந்தாலும் பரவாயில்லை, என்று துணிந்து, பேசின பேச்சு என்றே நான் இதனைக் கொள்கிறேன்.

தம்பி! வடக்கு வளருகிறது தெற்கு தேய்கிறது என்று நாம், கூறும்போது அலங்காரப் பேச்சு அடுக்கு மொழி என்று கேலி பேசினரே, அவர்கள் ராஜா அம்பலப்படுத்தியிருக்கும் உண்மையைக் கண்ட பிறகேனும் சிந்திப்பார்களா என்று கேட்டுப்பார்.

அவர்கள் சிந்திக்கிறார்களோ இல்லையோ, குமாரசாமிராஜா அவர்கள் நிரம்பச் சிந்தித்திருக்கிறார் என்பதும் விளங்கும் வகையில் மேலும் சில உண்மைகளை அவர் கூறுகிறார்.

> மத்ய சர்க்கார் அனுவசியமாக மாகாண சர்க்காரின் அலுவலில் குறுக்கிட்டுக் கொண்டு வருகிறது.

மத்ய சர்க்கார் ஆதிக்கம் செய்கிறது மாகாண சர்க்காருக்கு முழு உரிமை கிடையாது என்று நாம் பேசும்போது, முகம் சுளித்துக் கொள்கிறார்களே காங்கிரசார், அவர்கள் இந்தக் 'குற்றச்சாட்டு'க்கு கவர்னர் மூலம் பதிவு செய்யப்படுவது, கண்டு ஆச்சரியத்தால் வாய் பிளந்து நிற்பார்கள் என்று எண்ணுகிறேன். எவ்வளவு திறமையாக, அப்பழுக்கற்ற முறையில் மாகாண சர்க்கார் ஒரு திட்டம் தயாரித்தாலும், தங்கள் அதிகாரமும் அமுலும் இருக்கவேண்டும் என்பதற்காகவென்றே, மத்ய சர்க்கார், அதிலே அங்கொரு மாற்றமும் செய்து, திட்டத்தைத் திருத்துகிறது என்று கூறுகிறார் ஒரிசாவில் கவர்னராக வேலைபார்க்கும் ராஜா.

கூறினதுடன் அவர் அமைதி கொள்ளவில்லை; மத்ய சர்க்கார் இனியும் இந்தப் போக்கிலே இருக்கக் கூடாது என்று புத்திமதி கூறலாமா என்றுகூட அவர் எண்ணிக்கொள்ளவில்லை.

புத்திமதி கூறும் கட்டம்போய்விட்டது; பிறர் கூறும் அறிவுரையைக் கேட்கும் நிலையிலும் மத்ய சர்க்கார் இல்லை என்பது அவருக்குப் புரிந்திருக்கிறது. எனவே குமாரசாமிராஜா, போர்க்கொடி உயர்த்துவது போலவே பேசுகிறார்.

> மேலிடத்தவரின் குறுக்கீடுகளை நாம் எதிர்த்துப் போராடவேண்டிய காலம் விரைந்து வருகிறது

என்று கூறியிருக்கிறார்.

தம்பி! பொறுமை உணர்ச்சியும் பொதுப் பிரச்சினைகளிலே அக்கரையும் கொண்ட காங்கிரஸ் நண்பர் யாராவது உனக்குத் தெரித்திருந்தால், அவரை, குமாரசாமிராஜாவின் பேச்சிலே பொதிந்து கிடக்கும் உண்மைகளைப் பற்றி விளக்கும்படி கேள்; கேட்டுக் கொள்ளும் பண்பு அவரிடம் இருந்தால் நீ விளக்கிக் காட்டு.

வடக்குவேறு

தெற்குவேறு

வடக்கு வஞ்சனையுடன் நடந்து வருகிறது.

வடக்கே பணம் விரயமாகிறது.

தெற்கு ராஜ்ய அலுவலில் வடக்கு, அனுவசியமாகக் குறுகிடுகிறது.

வடக்கு குறுக்கிடும் போக்கை, தெற்கு எதிர்த்துப் போரிடவேண்டும்.

அந்தக்காலம் விரைவில் வருகிறது.

இவ்வளவும் சுரங்கத்துள் தூங்கும் தங்கம் போலவோ கடலுக்குள் உறங்கும் முத்துபோலவோ

(14-ம் பக்கம் பார்க்க)

தஞ்சை மண்ணிலே

கூலிக் கோளாறு!

புலவர் கோ. அண்ணாமலை

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என நீண்ட நெடுங்காலமாகப் போற்றப்பட்டு வருவது தஞ்சைப் பெருநிலம். இங்கே நடைபெறும் உழுதொழில்தான் பெருமளவுக்குத் தமிழகத்துக்கு உணவுதந்து காத்து வருகிறது. தமிழகத்துக்கு மட்டுமல்ல, அண்டையிலே உள்ள கேரளத்துக்கும் உணவூட்டும் வளநாடாக இருந்து வருகிறது.

சங்க காலத்துத் தமிழகத்திலே ‘சோழவளநாடு’ என்றும் ‘பொன்னிவளநாடு’ என்றும் சோறுடையநாடு என்றும் புலவர்களால் போற்றப்பட்ட நாடு. நஞ்சையும் புஞ்சையும் பூத்துக் குலுங்கும் பூமி! வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியாறு பாயப்பெற்ற சோழ நிலம்! கம்பனும் இளங்கோவும் ஆசைதீரப் பாடி முடித்த அழகு நிலம்!

அந்த நிலம் இன்றைக்குக் கூலித் தகராறுகளுக்கு உள்ளாகி தன் உயிர்த்தொழிலாகிய உழு தொழிலில் ஒருவித முடக்குவாத நோய் கண்டு அல்லல் படுவதைக் காண்கிறோம்.

கூலித் தகராறுகள் கொலை, கொள்ளை, நெருப்பிடல் ஆகிய பயங்கர வடிவங்களை எடுத்திருப்பதாகவும் அறியப்படுகிறது எந்தத் தொழிலுக்கு இருந்தாலும் இந்தத் தொழிலுக்குப் பழுதில்லை என்று முன்னோர்கள் சொல்லிப் போனார்கள். ஆனால் இன்று உழுதொழிலிலே ஈடுபட்டுள்ள சிறு நிலமுடையோர் உழவுத் தொழில் நிச்சயமாக ‘இலாபகரமான தொழில் அல்ல’ என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்! மற்றொரு பக்கத்திலும் உழுதொழிலை நம்பி வாழும் கணக்கற்ற உழவர் பெருமக்கள் தங்களுக்குத் தரப்படும் கூலி நிச்சயமாகக் கட்டுபடியாகிற கூலியல்ல என்று பெருங்குரல் எழுப்புகிறார்கள்.

அரசோ தஞ்சைத் தரணியை நம்பியிருக்கிறது! இது நிலைமை!

முடிமன்னர்கள் ஆண்ட காலத்திலே வயலிலே இறங்கி வேலை செய்யும் உழவர்க்கு என்ன விதமாகக் கூலிகள் வழங்கப்பட்டன என்று அறியக்கூடவில்லை. ஆனால் உழுதொழில் வளர்ந்திருந்தநிலைமையைக்கொண்டு ஒன்றை மட்டும் அறிய முடிகிறது, உழவர்களும் நிலக்கிழார்களும் தங்கள் நலத்தோடு நாட்டின் நலத்தையும் கவனத்திலே கொண்டு தொழிலாற்றி வந்திருக்கின்றனர்.

ஆண்டான்—அடிமை, கூலிதருபவன்—கூலிபெறுபவன் இவர்களிடையே விரும்பத்தகாத அந்த ஏற்றத் தாழ்வுடனே நல்லுறவும் இருந்து வந்திருக்கிறது. இந்த இரண்டு பேர்களுக்கு இடையிலே தரகர்கள் இல்லை இரண்டு எருதுகளை மோதிக் கொள்ளவிட்டு நடுவிலே வழியும் குருதிக்கு நாக்கை நீட்டும் நயவஞ்சக நரிகள் இருந்ததில்லை.

இந்த நரிகளால் நாட்டுக்கு ஏற்படும் பொல்லாங்கை நல்லவர்கள் எண்ணிப்பார்த்திடல் வேண்டும். உழவர்களும் சரி சிறு நிலமுடையவர்களும் சரி உழவுத் தொழில்பற்றி எழும் எந்தவித விவகாரத்தையும் மனம்விட்டுப் பேசுவதன் மூலமும், ஒருவரை ஒருவர் நம்புவதன் மூலமும் தீர்த்துக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட சுமுகமான—இணக்கமான சூழ்நிலையை யாரும் நடுவிலே புகுந்து கெடுத்துவிடாமல் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

“கொடுக்கப்படும் கூலி கட்டுபடியாகும் கூலியில்லை” — என்பது வயலிலே, இறங்கி வேலை செய்யும் உழவர்கள் வாதம்! இதில் உண்மை இல்லாமலில்லை, இன்றைக்கு அரசுத் துறையிலே வேலை செய்கிறவர்கள் — அவர்கள் இந்திய அரசு ஊழியர்களானாலும், மாநில அரசு ஊழியர்களானாலும் சென்ற மாதத்தில் கொடுத்த ஊதியம் இந்த மாதத்தில் கட்டுபடியாகவில்லை’ என்று வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் ஆகியவற்றிலே ஈடுபட்டு அரசை மூச்சுத்திணர வைப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம்! அப்படியிருக்கும்போது மிகக் குறைந்த வாழ்க்கை வசதிகளோடு கடின உடலுழைப்புக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட தஞ்சை உழவர்கள் ‘கூலி போதவில்லை’ என்றால் அதனை நாம் வெறும் கூச்சல் என்று தள்ளிவிட முடியாதுதான்!

அதேபோல சிறு நிலமுடையவர்கள் கடன்உடன்பட்டு உழுதொழில் செய்து கடைசியில் கணக்குப் பார்க்கிற நேரத்தில் ‘உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிச்சமில்லை’ என்ற மொழி நினைவுக்கு வருகிறது என்கிறார்கள். கூட்டுறவு வங்கிகளிலே ஆண்டுதோறும் உழவு செய்ய வாங்கும் கடனைத் தீர்க்கும் அளவுக்குக்கூட தொழில் ஊக்கம் தரவில்லை. பட்ட கடனுக்கு ஏதாவது இருக்கிற வீட்டையோ நிலத்தையோ விற்று ஈடு கட்ட வேண்டியிருக்கிறது என்கிறார்கள். சிலர் சாப்பாட்டுக்கூட விளைவதில்லை. இந்த நிலையில் ஒவ்வொரு வருடமும் கூலியை உயர்த்திக் கேட்டால் எங்கே போவது என்று குமுறுகிறார்கள்.

விளைவு...?

தங்களுக்குக் கட்டுபடியாகிற கூலிக்கு வேலை செய்வோரை நிலமுடையோர் வெளியிலிருந்து தேடிக் கொண்டுவர, அது எப்படி நாங்கள் காலங்காலமாய் இங்கே வேலை செய்கிறபோது இன்னொரு கூட்டம் வயலில் இறங்கப் போயிற்று என்று அதிக கூலி கேட்பவர்கள் குறைந்த கூலிக்கு வேலைக்கு வருகிறவர்களைத் தடுக்க—கலவரம் மூண்டுவிடுகிறது. பகையும், காழ்ப்பும், சினமும் முற்றி கொலை. தீயிடல் வரையிலே வந்து விடுகிறது. உழு தொழிலும் சிதைந்து குலைந்துபோகத் தொடங்குகிறது!

இது நலந்தானா? இரு சாராரையும்தான் கேட்கிறோம்—இது நலந் தருமா? தஞ்சைத் தரணியை நம்பியிருக்கும் தமிழகத்துக்கு வளந் தருமா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

முதலில் நிலமுடையவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்; இனி வருங்

காலத்திலேனும் இப்படிச் சிந்தியுங்கள்!

“நம்மிடம் கூலி வேலைக்கு வருகிறவர்கள் நாம் தரும் கூலியைத் தவிர வேறெதனையும் நம்பி வாழ வகையற்றவர்கள். செல்வாதார நோக்கிலே பார்க்கிறபோது நம்மிலும் வறியவர்கள். காலங் காலமாகத் தீண்டாமைக் கொடுமை என்றும் தீயிலே வெந்தவர்கள். அவர்கள் கேட்கிற கூலிஉயர்வு இன்றைக்கு நாட்டுக்குச் சேவை செய்யவே பிறப்பெடுத்திருக்கிறோம், மக்கள் பணி தவிர வேறொன்றைக் கனவிலும் கருதியறியோம் என்று கூவிவிட்டு, வாய்ப்பு ஏற்படுகிற போதெல்லாம் தங்கள் சம்பளத்தையும், நாள் படிகளையும், பிற வசதிகளையும் கொஞ்சமும் கூசாமல் பேசாமல், உயர்த்திக் கொள்கிற சட்ட மன்ற நாடாளு மன்ற உறுப்பினர்களின் செயலைவிடக்கொடுமையானதல்ல! அநியாயமானதல்ல! ஒவ்வொரு வினாடியும் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுக் கணக்கு மற்றவர்களின் சம்பள உயர்வுக்கும், பிற கோரிக்கைகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் எப்படி நியாயம் தருகிறதோ அப்படியே இந்த உழவர்கள் கோரிக்கைக்கும் நியாயம் தருமல்லவா?”

எனவே இன்னும் ‘ஆண்டான்—அடிமைத் தத்துவத்தை மனத்திலே பதித்து வைத்துக்கொண்டு அங்கலாய்க்காதீர்கள்! காலம் மாறுகிறது, கருத்துக்கள் மாறுகின்றன. உழைப்புக்கு மதிப்புத் தந்தே தீர வேண்டிய சகாப்தம் நடந்துகொண்டிருக்கிறது. எனவே நிலமுள்ளோர் நல்ல உளமுள்ளாராகிக் கொஞ்சம் உச்சிப் படிகளிலிருந்து இறங்கி வாருங்கள் என்று வேண்டுகிறோம்.

இவர்களை வேண்டுவதைப் போலவே வயலில் இறங்கி வேலை செய்யும் உழவர்களையும் நாம் வேண்டுகிறோம். ஆவேசப்படாமல் கொஞ்சம் பொறுமையுடன் சிந்தியுங்கள். உங்களுக்கே தெரியும் உழவுத் தொழில் இன்றைக்கு ‘இலாபகரமான தொழிலாக’ இல்லை. மற்ற இரும்பு எஃகு சம்பந்தப்பட்ட இயந்திரத் தொழில்களைப் போலவோ, போக்குவரத்து, செய்தித் தொடர்புத் துறைகளைப் போலவோ, பிற தொழிற்சாலைத் தொழில்களைப் போலவோ இலாபந்தவிர வேறொன்றும் இல்லை என்று சொல்லத்தக்க தொழில் இல்லை. சிறுநிலமுடையவர்கள் அப்படியொன்றும் ‘குபேர சம்பத்துடன்’ கூத்தாடும் நிலைமையிலே இல்லை. உங்களைவிட ஒரு படி மேலே இருக்கிறார்கள் அவ்வளவுதான். ஏதோ கொஞ்சம் நிலமிருக்கிறது என்பதைத்தவிர வேறொரு வேறுபாடும் இல்லை.

இனிவருகிற யுகமோ எந்திர யுகமாகத்தான் இருக்கும் எந்திரங்களின் துணைகொண்டு மனிதர்களை ‘மிச்சப்படுத்த விரும்பும்’ விஞ்ஞான காலம். கொடுக்கிற கூலி போதுமானதாக இல்லை என்று சொல்லிவிட்டு அடுத்தாற்போல் கேட்கிற கூலியை நியாயமானதாகக் கேளுங்கள் கேட்கும்போது ஆவேசப் படாதீர்கள். உழவுத்தொழில்பருவந் தவறாமல் செய்யப்பட்டே தீர வேண்டிய தொழில். இன்றைக்கு வேலை நிறுத்தம் செய்துவிட்டு நாளைக்குத் தொழிற்சாலை திறந்ததும் ஈடுகட்டிவிடலாம் என்கிற தொழில் அல்ல,

விவகாரங்களை நிரந்தரமாகத் தீர்த்துக்கொள்ள முயலுங்கள். இல்லாவிட்டால் குறைந்தது மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கும் முன் உள்ள கோடை நாட்களில் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். உணவு உற்பத்தி செய்யவேண்டிய வேளையில் தகராறுகளை உற்பத்தி செய்யாதீர்கள்.

கூலிப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள கிளம்பி இன்று வேறுபல பிரச்சினைகளும் தகராறுகளும் நீண்டு வெறுப்பு முற்றியிருப்பதைத்தான் காண்கிறீர்கள். எனவே ‘ஆவேசத்தை’ முதலில் குறையுங்கள். உங்களிடம் தமிழக மக்கள் அத்தனை பேரும் உணவுக்காக ஏங்கி நிற்பதை மனக்கண்ணால் பாருங்கள். எப்படிப்பட்டதொரு மகத்தானபணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்கள் சேற்றில் கால்வைக்காவிட்டால், நாட்டு மக்கள் சோற்றில் கைவைக்க முடியுமா? எனவே ஆவேச மனத்தைவிட்டு அன்பு மனம் கொள்ளுங்கள். இடைத்தரகர்களை நம்பாதீர்கள். அவர்களால் உங்களுக்கும் நன்மையில்லை நிலமுடையவர்களுக்கும் நன்மையில்லை. எங்கள் அன்பான வேண்டுகோளுக்குச் செவிசாயுங்கள்!

இனி இந்தக் கூலி விவகாரத்தை ஆராய நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்படுத்தியுள்ள ஒரு மனிதர் ஆய்வுக் குழுவுக்கு ஒரு வேண்டுகோள்.

தஞ்சையிலே நடைபெறும் உழுதொழில் ஆண்டில் பனிரண்டு மாதங்களும் நடைபெறுகிற ஒரு தொழில் அல்ல. அதிகமாகப் போனால் ஏழு அல்லது எட்டு மாதங்கள்தான் இந்தத் தொழிலில் வேலையிருக்கும். இந்த ஏழெட்டு மாதத்தில் ஈட்டுகிற கூலியைக் கொண்டுதான் வேலையும் கூலியும் இல்லாத மற்ற நான்கைந்து மாதங்களையும் ஏழை உழவர்கள் அரை வயிறும் கால்வயிறுமாக ஓட்ட வேண்டும். எனவே இந்தவேலையில்லாத நான்கைந்து மாதங்களுக்கும் சேர்த்து வேலையுள்ள ஏழெட்டு மாதங்களில் வாங்கும் கூலியில் கொஞ்சம் கூடுதலாகவேதான் கேட்பார்கள்.

கொடுக்கிறவர்கள் அது எப்படி முடியும் என்றுதான் எதிர்த்துக் கேட்பார்கள்.

எனவே இந்த இக்கட்டான நிலையினைத் தவிர்க்க, வேலையில்லாத அந்த நான்கைந்து மாதங்களிலும் நிலமுடையவர்கள் கூலி தரவும் உழவர்கள் கூலி பெறவும் உழுதொழிலையொட்டிய ஒரு வேலை தஞ்சைப் பகுதிக்குத் தேவை. இதை மனங்கொண்டு அப்படியொரு வேலை வாய்ப்பை நிபுணர்கள் ஆராய்ந்து தரவேண்டும். அதற்கு அரசும் நிலமுள்ள நல்லோரும் முயலவேண்டும் இந்தக் கருத்தை நமது மதிப்பிற்குரிய நீதிபதி உயர்திரு கணபதியாப்பிள்ளை அவர்கள் தங்கள் பரிந்துரையில் சேர்த்துரைக்கவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறோம்.

இப்படியொரு வழி கண்டால்தான் தஞ்சைத் தரணியிலே ஏற்படும் கூலிக் கோளாறுகள் நீங்கும். கூலி உயர்வைக் காட்டி ஏதுமறியா ஏழை உழவர்களை ஆட்டிவைக்கும் நரிக்கூட்டங்கள் திருந்தும்!

விற்பனையாளர் தேவை!

“காஞ்சி” இதழை விற்பனை செய்ய, கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை. முன் பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

1. சந்தைபுதுப்பாளையம்
2. சிவலார்குளம்
3. நாகர்கோயில்
4. திருச்சி
5. பெரியநாய்க்கன்பாளையம்

விவரங்களுக்கு:

உரிமையாளர்.
‘காஞ்சி.’
காஞ்சிபுரம்-2

With the best compliments from:

Pioneer Civil Works

KANGAYAM.

With the best compliments from:

Guru Shree Shantivijai Jian Trust,

MADRAS-7.

"இன்னுமா என்னைக் காதலிக்கின்றீர்கள்?"

—புலவர் அரிமதி தென்னகன்—

மணிமேகலை ஓர் கல்லூரி மாணவி.

தன் வீட்டுப்பக்கத்தில் இருந்த மாதவன், தன்னைக் காதலிப்பதாக அறிந்த அவள் அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் தள்ளவும் மனமில்லாமல் 'மன ஊஞ்சல்' ஆடிக் கொண்டிருந்தாள்.

பத்திரிகைக் கதைகளையும், நாவல்களையும் படித்துவிட்டு, திரைப்படத்தில் வரும் காதல் கதைகளைப் பார்த்துவிட்டு, 'எப்படியாவது காதல் செய்யவேண்டும்; எவளாவது தன்னைக் காதலித்தே தீர வேண்டும்' என்ற வேகத்தில் 'காதல் தொழில்' நடத்தவிரும்பும் இளைஞர்களையும், மாணவர்களையும் பற்றி அவள் நன்ருக அறிந்திருந்தாள்.

தன்னை 'அவள் காதலித்தாள், இவள் காதலித்தாள்' என்று சொல்லுவதைப் பெருமையாகக் கருதும் இளவட்டங்களையும், அப்படிச் சொல்லுபவனை மன்மதனுகநினைத்து மதித்து, தனக்கும் அந்நிலை இல்லையே என்று ஏங்கும் 'எண்ணக் காதலர்'களையும் நன்ருக அறிந்திருந்தாள். காதலிப்பதும், காதலிப்பதாகச் சொல்லுவதும் ஒரு 'பேஷ'னுகக்கருதும் காதல் உலகத்தை நன்ருகப் புரிந்து வைத்திருந்தாள் அவள். காதலைப்பற்றி அவள் கொள்கையே வேறு.

எப்படியோ, யாரிடத்தும் அசைவு கொள்ளாத அவள் உள்ளத்தில் மாதவனைப் பொருத்தவரை ஒரு சலனம் ஏற்படுவதை மட்டும் அவளால் தடுக்க முடியவில்லை.

"நான் அவரை உண்மையாகவே விரும்புகிறேனு" அவளுக்கே இப்படி ஒரு ஐயமும் இருந்தது.

"நான் அவரின் உடல் அழகைக் கண்டுதான் காதலிக்கின்றேனு" அவளுக்கே புரியாத புதிர் இது.

"அவர் என்னை விரும்புவது என் அழகை, இளமைக் கவர்ச்சியையா? அல்லது......"

முடிவற்ற இந்த வினு அவள் உள்ளத்தில் கேள்விக்குறியாகவே நின்றது.

காதலித்துத் திருமணம் செய்து கொண்ட தன் அண்ணனை நினைத்துப் பார்த்தாள் ஒருமுறை. 'ஆசை அறுபது நாள், மோகம் முப்பதுநாள்' என்ற பழமொழிப்படி, தற்போது அவர்கள் எலியும் பூனையுமாக இருப்பதை எண்ணிப்பார்த்தாள்.

அவள் உணர்வு மிரண்டது; உடல் ஆடியது.

ஒரு நாள், தன் அண்ணனும், அவர் நண்பன் சீனுவும் பேசிக் கொண்டது ஏனு நிழலாக உள்ளத் திரையில் காட்சியாக அவள் உள்ளத்தில் ஓடிக்கொண்டே இருந்தது,

அன்றைக்கு...

"டேய் சீனு, காதல் கீதல்னு உளராதே. முகம் அழகா இருக்கு; ஒடிச்சிக் கட்டினுப்போல பெண்ணு 'ஸ்டைலா' இருக்கா, சினிமா ஸ்டாராட்டுமா இருக்கா; 'ஹேர் ஸ்டைல்' என்னமா இருக்குன்னு இந்த காலத்துப் பசங்க காதல் காதல்'னு தடுமாறுருனுங்க..."

சீனுவின் முகத்தில் ஈயாடவில்லை.

"டேய், எவனுவது ஒருத்தன், பெண்ணு நல்ல குணம் அடக்கப் பண்பு; நா காக்கும் நல்லவள். அதனுல் அவளைக் காதலிக்கிறேன்னு இந்த நாட்டிலே சொல்லி இருக்கானு..."

சீனு இடை மறித்தான்.

"டேய், தேவ்! நீ உன்னை நினைச்சுப் பேசாதேடா, நான் அப்படி இல்லை. என் கமலும் அப்படி இல்லை."

"சீனு, அவசரப்படாதே. ஒரே ஒரு கேள்வி—கேட்கிறேன். உங்களுக்கு அந்த நோய் ஏற்பட்டு எவ்வளவு நாளுடா இருக்கும்?"

'டென் டேஸ்' ஆகுதடா. டேய், நீ என்னதான் சொல்லு; அவ இல்லாம நான் இல்லேடா."

"போதும் நிறுத்துடா; நைலானையும், பவுடரையும், குதிரைக் கால் செருப்பையும் பார்த்துதானே அவளைக் காதலிச்சே, நேராவே கேட்கிறேன்டா; பத்து நாளிலே வேறெதைப் பார்த்துடா நீ விரும்பினே? அவ அறிவைப் பார்த்தா ஆசைப் பட்டே?"

சீனு அமைதியாக இருந்தான்,

தேவ் தொடர்ந்தான்.

"அப்பா சினிமா கதாநாயகா! லைலா மஜ்னு, தேவதாஸ் பார்த்தியா? சீனு! கதை வேறு; வாழ்க்கை வேறப்பா சினிமாவையே வாழ்க்கையா நினைக்காதே. காதலன் காதலியை நினைத்து ஏங்குவது, சோக கீதம் பாடுறது, காதல் தோல்வின்னு சாகறது, இதெல்லாம் பார்க்க சுவையா இருக்கும்; படிக்க ரசமா இருக்கும். வாழ்க்கைக்குப் பொருந்தாதப்பா.

சினிமாவிலே அஞ்சே நிமிஷத்திலே காதலிப்பான். அதுக்குள்ளேயே 'டூயிட்' பாடுவாங்க. இதல்லப்பா வாழ்க்கை. போடா போ; யாரா இருந்தாலும் நல்லவளான்னு பார்த்துக் கல்யாணம் பண்ணப்பா.

என்னைப் பார்த்தியா? என் காதல் எந்த லட்சணத்திலே இருக்கு பார்த்தியா."

தந்தையின் குரல் மேகலையை விழிக்கச் செய்தது.

"என்னம்மா மேகலை, ஒரே சிந்தனையா இருக்கே; இதோ பாரம்மா மணிமேகலை! நாளைக்கு உன்னைப் பார்க்க மாப்பிள்ளையும், அவங்க வீட்டாரும் வராங்க. தயாரா இரும்மா.

நீ படிச்சப் பொண்ணு; புத்திசாலியும்கூட. உனக்கு நான்சொல்ல என்னம்மா இருக்கு" என்றுசொல்லி விட்டு மேகலையின் தந்தை மாடிக்குச் சென்றுவிட்டார்.

"உனக்கு நான் சொல்ல என்னம்மா இருக்கு?"

இந்தச் சில வார்த்தைகளில் உள்ள அழுத்தத்தையும் கோடிட்டுக் காட்டிய குறிப்பையும் மேகலை புரிந்துகொள்ளாமல் இல்லை.

"மதுரை மாப்பிள்ளையா? மாதவனு?"

அந்த நிலையில் எந்த முடிவுக்கும் அவளால் வரமுடியவில்லை.

மணி ஐந்து என்பதைத் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துத் தெரிந்துகொண்ட மணிமேகலை, சிந்தனை ரேகை முகத்தில் படர, ஏதோ ஒரு திடமான முடிவோடு கடற்கரைக்குச் சென்ருள்,

* * *

"வா மேகலே;" மாதவன் வர வேற்ருன்.

இருவரும் மக்கள் போக்கு வரத்துக் குறைவான, ஓர் மறைவான இடத்தில் அமர்ந்தார்கள்.

"என்ன மேகலே; எதற்காக இந்த யோசனே? பெரிய எழுத்தாளன்கூட இப்படிச் சிந்திக்க மாட்டானே." ஏதாவது பேசவேண்டும் என்ற துடிப்பு மாதவனின் பேச்சில் தலே நீட்டியது.

அவனேப் பொருத்தவரை அவன் 'டூயட்' பாடவும்தயார்தான். அவன் பார்த்த சினிமாப் படங்கள் எல்லாம் அவனுக்குக் கற்றுத் தந்த பாடத்தை மறக்க முடியுமா அவனுல்?

"தை பிறந்து விட்டாலே பெண்களேப் பொருத்தவரைச் சிந்திக்க வேண்டியதுதானே" சிரிப்பைக் கலந்து சொற்களே உதிர்த்தாள்.

"ஆமாம் மேகலே; தை பிறந்தாலேயே, கன்னியர்க்கும் காளேயர்க்கும் திருமணத்திற்கு வழி பிறந்துதானே ஆகவேண்டும். அப்படியானுல் ...... உனக்குத் திருமண யோசனேதானே?"

ஆமாம் எனத் தலேயசைத்தாள் மேகலே.

"எனக்கு நீயும், உனக்கு நானும் என்று இருக்கும்போது நமக்கு ஏன் இந்த வீண் சிரமம்"

"உண்மைதானுங்க; ஆனு..."

"என்ன ஆனு..."

"இதோபாருங்க; உங்ககிட்டே நான் எதையும் மறைக்க விரும்பவில்லே..."

மணிமேகலே பேச்சை முடிப்பதற்குள் 'நீ என்ன சொல்லுகிருய்' என்று மாதவன் இடைமறித்தான்.

"அவசரப் படாதிங்க..." தொடர்ந்தாள் மணிமேகலே.

"...என்னே மணக்க முன்வந்தவர்கள் பலர், சிலநாட்களிலேயே மரணமடைந்து விட்டார்கள்.

என்னே முதன் முதலில் பெண் பார்க்கவந்த சேலத்து மாப்பிள்ளே, 'விருப்பம்' என்று சொல்லிவிட்டு சென்றவர், இந்த ஊர் இரயில் நிலேயத்திலேயே, படி தடுக்கி விழுந்து இறந்துவிட்டார்.

அடுத்து வந்த ஒருவர், இங்கிருந்து சென்ற ஒரு மாதத்திலேயே 'தலேவலி' என்று படுத்தவர் மறுமுறை எழுந்திருக்கவே இல்லே..."

மாதவனின் முகத்தில் சவக்களே படிந்துவிட்டது என்றுதான்சொல்ல வேண்டும்.

...பிறகு வந்த ஒருவருக்கு வேலே போய்விட்டது; ஒருவருக்கு அம்மை வார்த்துவிட்டது.

இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் உங்களே மணக்க என் பெற்ருேர்கள் சம்மதித்தனர்.

மேகலேயின் கண்கள் கலங்கிவிட்டன. ஆனுல், மாதவனின் மனக்கடலில் இருந்து எழுந்த எண்ண அலேகள் ஏதோ சில நினேவுக் கோட்டைகளே இடிக்கத்தொடங்கின.

இரண்டு நாட்களுக்கு முன் தனக்குத் திடீரென்று மார்வலி ஏற்பட்டதையும், வரும்போது ஒரு லாரி தன்மேல் மோதப் பார்த்ததையும் எண்ணிப் பார்த்த மாதவனின் நாக்கு உலர்ந்து மேல்வாயில் ஒட்டிக்கொண்டது.

அப்போது திருவல்லிக்கேணி பார்த்தசாரதிக் கோயிலில் சாமி புறப்பட்டதை அறிவிக்கும் முறையில் எழுப்பப்பட்ட 'டுமீர் டுமீர்' என்ற இரட்டை வெடியோடு ஒரு 'அவுட்டுச்' சப்தமும் கேட்டது.

மாதவன் எழுந்து நின்ருன்,

"ஏங்க இன்னும் என்னேக் காதலிக்கிறீர்களா?"

மாதவன் ஆகாயத்தைப் பார்த்தான்.

பலவகை வண்ணங்களோடு பூப்பூவாக, நட்சத்திரங்களே வாரி இறைத்தது போல விடப்பட்ட 'அவுட்டு' சிறிதுநேரம் வானத்தை வண்ணக் குளமாக்கியதையும், பிறகு கருகி மறைந்ததையும் மேகலே கண்டாள்.

"கவர்ச்சியை விரும்பும் காதலும் ஒரு 'அவுட்டு' வெடிதான். காண மகிழ்ச்சியாக இருக்கும்; கணத்தில் மறையும்."

இப்படி ஒரு குரல் மேகலேயின் உள்ளத்தில் எங்கோ ஒரு மூலேயில் ஒலித்தது,

ஜாதகத்திலும், ஜோசியத்திலும் நம்பிக்கை கொண்டவர் மாதவன் என்பதை அறிந்திருந்தது இப்படிப் பயன்படும் என்பதை எதிர்பார்க்காத மணிமேகலேயின் வாயிலிருந்து "இன்னும் என்னேக் காதலிக்கின்றீர்களா?" என்ற கேள்வி அரைகுறையாகப் பிறந்தது.

ஆனுல்...

அதைக் கேட்க மாதவன் அங்கு இல்லே.

சந்திரனே விட்டுக் கருமேகம் கலேய ஆரம்பித்தது. மணிமேகலேயின் உள்ளம்போல சந்திரன் 'பளிச்' சென்று 'தகதக'வென்று பிரகாசித்தான்.

மணிமேகலேயின் உள்ளமும் அப்படித்தான் இருந்தது.

❀

9-ம் பக்கத் தொடர்ச்சி

கூட அல்ல தோலுக்குள் இருக்கும் சுளேபோலவோ, நெல்லுக்குள் இருக்கும் அரிசிபோலவோ, இருக்கிறதா இல்லேயா என்று கேட்டுப்பார்.

குமாரசாமிராஜா இந்த அளவு எடுத்துக் கூறியது எனக்கென்னமோ, கை சுளுக்குடன் கஷ்டப்படும் சுந்தப்பனுக்கு வலி போக்கிக்கொள்ளக் கிடைக்கும் பச்சிலேத் தைலம்போலத் தோன்றுகிறது. இதுவாவது கிடைக்கிறதே என்று மகிழக்கூடத் தோன்றுகிறது.

கவர்னர் பதவியிலிருந்து விலகியதும், இது குறித்து, மேலும் பல உண்மைகளே, விஷயங்களே நான் கூறுகிறேன்- என்று குமாரசாமிராஜா கூறுகிருர்.

இதற்குள் தூதும், சமரசப் பேச்சும், ஆகாது கூடாது, அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள், இவர்கள் ஏளனம் செய்வார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறும் பாசவலேயும் வீசப்பட்டிருக்கும்.

அத்தனேக்கும் தப்பி வந்து ஆற்றலுடன் குமாரசாமிராஜா அவர்கள், வடக்கு கொண்டுள்ள கோலத்தையும் போக்கினேயும் மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி வடக்கு செலுத்தும் ஆதிக்கத்தை எதிர்த்து, ஏன்என்றுகேட்கும்வீரத்தலேவராகவெளிவரவேண்டும், முடிகிறதோ இல்லேயோ, இப்போதைக்கு இந்த அளவுக்கேனும் அஞ்சா நெஞ்சுடன் உண்மையை எடுத்துரைத்த நேர்மையைப் பாராட்டத்தானே வேண்டும்.

செந்திலாண்டவன் கோயிலில் சந்தனம் அரைத்திடும் சுந்தப்பனுக்கு, கை சுளுக்குப் போக, எருக்கம் பாலும் களிமண் பூச்சும் மட்டுமல்ல பச்சிலேத் தைலமும் சிறிதளவு கிடைக்கிறதென்ருல். கொஞ்சம் நிம்மதிதானே!

அந்த விதமான மகிழ்ச்சி நமக்கு ராஜாவின் பேச்சு கேட்டதில். வாழ்க அவர்தம் வாய்மைப் பற்று! வளர்க அவர்தம் அஞ்சாமை என்று நீயும் நானும் வாழ்த்துவோம் தம்பி! வேறு என்ன இருக்கிறது நம்மிடம், அவருக்கு அளித்திட.

அண்ணன்,



(9—9—56 திராவிட நாடு இதழில்)

1. கேரள விவகாரத்தில் மத்திய அரசு தலையிடுமா?

தலையீடு தேவையில்லாத பல துறைகளிலும் அதன் தலையீடு ஒரு தலைவலியாகவே இருந்து கொண்டிருக்கிறதே, அதுபோதாதா?

2. கிடைக்கவேண்டிய நீதி தாமதப்படுமானால், பொருள் உண்டா?

உண்டு. 'நீதி தாமதப்படுமானால், நீதி மறுக்கப்படுகிறது' என்பது ஒரு ஆங்கில வழக்கு. அதுதான் அதன் பொருளும்கூட!

3. வகுப்புக் கலவரங்கள் மிகுந்துள்ள இடம் எது?

இந்தியாவில்தானே கேட்கிறீர்கள்! 1969 ஜனவரிமுதல் மார்ச் முடிய இந்தியாவில் இதுவரை 101 வகுப்புக்கலவரங்கள் நிகழ்ந்துள்ளனவாம்; இதில் பீகாரில் மட்டும் 41 என்று தெரிகிறது. அடுத்து மே வங்கத்தில் 14ம், உ.பி.யில் 9ம், கேரளத்தில் 9ம், ஒரிசாவில் 7ம், குசராத்தில் 5ம், மைசூரில் 4ம், ம. பியில் 2ம், மாராட்டிரத்தில் 2ம், இராசஸ்தானில் 3ம், என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் எதுவும் இல்லை என்பதையும் ஞாபகத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள் அந்தக் கணக்கில்.

4. பாக். அதிபராக விருந்த அயூப்கான்மீது முஸ்லிம் லீக் கட்சி, வழக்குத் தொடரப்போவது உண்மையா?

?! வினா-விடை

அந்த அளவுக்கு விவரம் கிடைக்கவில்லை. இங்கு தொழிலதிபர் மகாலிங்கம், காமராசருக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டிருப்பதுபோல், அயூப்புக்கு, முஸ்லிம் லீக் வக்கீல் நோட்டீஸ் மட்டும் விட்டிருப்பதாகத் தெரிகிறது.

5. வேலை கேட்டுப் போராடி கைது செய்யப்பட்டவர்கள் உண்ணாநோன்பு இருக்கிறார்களே தெரியுமா?

அப்படித்தான் செய்திகள் வந்துள்ளன. போராடுவதும் ஒரு 'வேலை'தானே! உண்ணாநோன்பு இருப்பதும்கூட ஒரு வேலைதானே! ஏதாவது ஒரு 'வேலை' தேவை! நிறைவேறினால் சரி!

6. அமைச்சர் கோவிந்தசாமி மறைவுக்காக சரியான முறையில் கடையடைப்புக்கள் நடத்தப்படவில்லையே—சரியா இது!

கடையடைப்புக் கலாட்டாக்கள் தேவையா என்பதை தீவிரமாகச் சிந்தியுங்கள்.

7. பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைந்துவருவது, அது ஆதரவிழக்கிறது என்பதைக் காட்டுகிறதா?

இல்லை. மக்களது தேவைகள் வேறுவடிவத்தில் மாறிஇருக்கிறது என்பது பொருள்.

8. 'இருதயத்தில் ஓர் ரோஜா' தொடர்கதை மீண்டும் வராதா?

அடுத்த கிழமை முதலே தொடரவிருக்கிறது! ஆவலை அடக்கி வையுங்கள்.

9. அறிஞர் அண்ணா எழுதிய கதைகளைத் தொடர்ந்து பிரசுரிக்க இயலாதா?

விரைவில் பேரறிஞர் அவர்களது முழுநீள நாடகமான 'நீதிதேவன் மயக்கம்' தொடரவிருக்கிறது; படித்து மகிழுங்கள்.

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

மணிநேரம்தான் உழைக்க வேண்டும் என்று சட்டம் எடுத்துக் காட்டுகிறது. மூளையுழைப்புக்காரர்கள் ஆறு மணி நேரம் வேலை செய்தால்கூட அதிகக் களைப்புக்கு ஆட்பட்டுவிடுவார்கள் என்பதையும் தொழிலாளர் சட்டமே புலப்படுத்திக் காட்டுகிறது.

பிரச்னைகளை உருவாக்குவதும், சிக்கல்களை அவிழ்த்துவிடுவதும் என்பதுபோன்ற மூளையுழைப்புக்குரியவர்கள் நம் அருந் தலைவர்கள்.

உடல்நலம் பற்றிக்கூட கவலைப்படாமல், ஊர் சுற்றிப் பிரச்னைகளைத் தீர்க்க முனைவதும், செயல்படத் துடிப்பதும், தலைவர்கள் இதுபோல் பணியாற்றித் தீர வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கித் தருவதும் இனியும் விரும்பத்தக்கதல்ல.

கழகத் தோழர்கள், தலைவர்களுக்குத் தரும் தொல்லைகளைக் குறைத்துத் தீரவேண்டும். எந்தவொன்றையும் தலைவர்களைக் கொண்டுதான் நடத்திக் கொள்ளவேண்டும் என்பனபோன்ற அற்ப ஆசைகளே, தலைவர்களுக்குத்தீராநோயாக மாறிவிடுகின்றன என்பதனை இந்தச் சந்தர்ப்பத்திலாவது நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிறக்கின்ற சிந்தனையும், எடுக்கின்ற முடிவும், எஞ்சியுள்ள மூத்த தலைவர்களை நோய்க் கொடுமையினின்று காப்பாற்றட்டும் என்று தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஏ. ஜி. அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு நம் இரங்கலைத்தான் படைத்துக் கொள்ள முடியும் என்று மட்டுமே எண்ணிக் கொண்டுவிடக் கூடாது. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்விடுத்துள்ள வேண்டுகோளை யொட்டி,ஏ. ஜி. அவர்களது குடும்ப நிதிக்கு அள்ளித் தரவேண்டும்!

காஞ்சி 25—5—69 REGD. No. M. 8326

முன்றானை!

"ஊடுவதில் கூடுவதில் பக்கம் வந்து
உறங்குவதில் கைதேர்ந்த மாதே! பாட்டுப்
பாடுவதில் சிறந்தவள்நீ! உனது வாய்நீர்
பருகுவதில் சிறந்தவன்நான்! அரங்கில் ஏறி
ஆடுவதில் தேர்ந்திருந்தும் அலைக டல்நீர்
ஆடுதற்குத் தயங்குவதேன்?" என்று நன்குக்
கூடுவதில் குலவுவதில் மன்ன னுனக்
கோவலனே மாதவியைப் பார்த்துக் கேட்டான்!

கார்தட்டும் கூந்தலினைக் கொண்டு; காதற்
கண்சிமிட்டிக் கதையளக்கும் மங்கை "உப்பு
நீர்தட்டும் கடலிடையில் குளித்தால் மேனி
நிறந்தட்டிப் போய்விடுமே" என்றாள்! மார்பில்
தார்தட்டும் கோவலனே "கடல்நீ ராடித்
தண்ணீரில் குளித்திட்டால் போதும்! மேனிச்
சீர்தட்டிப் போகாது! நிறத்தில் மாற்றம்
சிறிதளவும் நேராது! உண்மை!" என்றான்!

தும்பைப்பூ வெள்ளைநிற நுரைய லைகள்
துள்ளுகின்ற கடற்கரையை வந்த டைந்தார்!
கம்பைப்போல் முதிர்ந்துநிற்கும் மேனி கொண்ட
கனியுதட்டு மாதவியோ சிரித்து "மாட்டுக்
கொம்பைப்போல் தந்தத்தைப் பெற்ற ஆனைக்
கூட்டம்போல் எழுந்துவரும் அலைகள் முன்னால்
அம்பைப்போல் நீந்திடுவேன்" என்று ரைத்து
அலைகடலில் கால்வைத்து மூழ்க லானாள்!

முத்தளித்து அலைக்கரத்தால் பவளந் தன்னை
முகந்தளிக்கும் கடலிடையில் மாது லையின்
வித்தளித்துச் சிரிக்கின்ற இதழால் முத்தம்
விரைந்தளிக்கும் மாதவியும்; அவளுக் கேத்தன்
சொத்தளித்து மெய்யணைத்துப் பஞ்ச ணையில்
சுகமளிக்கும் கோவலனும் மூழ்கி மூழ்கித்
தத்தளித்துத் தடுமாறிக் கைகள் கால்கள்
தாம்சளைக்க விழிசிவக்க நீந்த லானார்!

"கோபத்தால் கண்சிவக்கும்! அன்றி நாளும்
குடிகெடுக்கும் கள்ளினையேக் குடித்தல் செய்யும்
பாபத்தால் கண்சிவக்கும்" என்றான்! தென்னம்
பாளையெனச் சிரிப்பவளோ "நீச்சல் என்னும்
ஆபத்தால் கண்சிவக்கும்! வேறு எந்த
அனுபவத்தால் கண்சிவக்கும்?" என்று கேட்டாள்!
"தாபத்தால் கண்சிவக்கும்" என்றே காதல்
தலைமகளைக் கோவலனே அணைத்துக்கொண்டான்

"நீருக்குள் அதுவும்நாம் தனித்து இங்கே
நீந்துகின்ற நேரத்தில் எதற்குக் கண்ணே
தேருக்கு ஆடையினைச் சுற்றல் போன்றுச்
சேலையினைச் சுற்றியுள்ளாய்?" என்றான்!
"கொஞ்சம்
பேருக்குத் தானேஇச் சேலை தன்னைப்
பெயருக்கு அணிந்துள்ளேன்! அதுவும் என்னை
நீர்தழுவக் கூடாது என்ப தற்கே
நெஞ்சுவரைப் போர்த்தியுள்ளேன் "என்று
சொன்னாள்

"யார்தழுவக் கூடாது! நானா? ஐயோ
இதுயென்னச் சோதனையோ!" என்றான்!
"போங்கள்
நீர்தழுவக் கூடாது என்று சொன்னேன்!
நிச்சயமாய் இல்லையத்தான்! கடல லையின்
நீர்தழுவக் கூடாது என்று தானே
நினைத்துரைத்தேன்" என்றாள்! பே ரழகி யென்னும்
பேர்தழுவும் மாதவியின் சேலை தன்னைப்
பிடித்தபடிக் கோவலனே கூற லானான்!

"சிலந்திவலை பார்த்தபின்னே மனிதன் மண்ணில்
சேலையினை நெய்வதற்குக் கற்றுக் கொண்டான்!
சிலந்திவலை போல்நெய்தக் காரணத்தால்
சேலையினைச் 'சீவலை'யென் றழைத்தார்! அஃதே
நலங்குன்றிச் சீலையென்றும் சேலை யென்றும்
நவில்கின்ற நிலைவந்த தென்றான்!" கொங்கைக்
குலம்மறைக்கும் சேலையின்மேற் புறத்தை ஏனோ
குறித்தார்கள் முன்றானை என்று?" என்றாள்!

கோட்டைமதிற் சுவர்காக்கும் வீரர் தம்மைக்
கூறினர்முன் தானையென! அதுபோல் மேனிக்
கூட்டுக்கு மதில்போன்று எழுந்து நிற்கும்
கொங்கைகளில் தவழ்ந்தபடி பெண்மை என்னும்
கோட்டையினைக் காப்பதினால் மார்பை மூடிக்
கொள்கின்றத் துணியைமுன் றானை என்றார்!
கோட்டைக்கோ நான்தலைவன்! உன்முன் தானை
குறுக்கிட்டு எனைத்தடுப்ப துண்டோ?" என்றான்!

"உயிர்முன்னால் உக்குறிலோ மெய்விட் டோடும்!
உமமுன்னால் என்ஆடை மெய்விட் டோடும்!
உயிர்நீரே! உமதுயிர்நான்! உயிரின் முன்னால்
உயிர்வந்தால் உடன்படுமெய் தோன்றும்" என்றாள்!
"உயிரே!என உடன்படுக்கும் மெய்யே! சேர்ந்து
உடன்படுக்க நமக்குள்ளே உடன்ப டிக்கைத்
துயிலுங்கால் தேவையில்லை" என்றான! கேட்டுத்
தோகைமயில் முகஞ்சிவக்கப் புன்ன கைத்தாள்!

—இறைவன்—

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ.இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86 திருக்கச்சிநம்பி தெரு. அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.